பக்கங்கள் - 16
விலை - ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 217

புதன்கிழமை
01 ஜூலை 2026


ஆனி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

புதன்பொய்கை

ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில்

# வடக்கிலும், கிழக்கிலும் வெப்பம் உச்சம்பெறும்!

பேராசிரியர் பிரதீபராஜா கணிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 1

எதிர்வரும் ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெப்பநிலை 2.8 பாகை செல்சியஸால் அதிகரிக்கும் - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

»15

நில மீட்புப் போருக்காக

## வலி. வடக்கு மக்களால் புதிய அமைப்பு உதயம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வலிகாமம் வடக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இராணுவத்தின் பிடியிலுள்ள தமது காணிகளை மீட்பதற்காக 'பலாலி மீள்குடியேற்ற அமைப்பு' என்ற பெயரில் புதியதொரு அமைப்பை உருவாக்கியுள்ளனர். இது தொடர்பில் அந்த அமைப்பினர் தெரிவித்த

»15

## சாலேயின் தேவைக்கேற்ப விசாரணைகள் செல்லாது!

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 1

சுரேஷ் சாலே தொடர்பான விசாரணைகள் உரிய வகையில் இடம்பெறும். சாலேயின் தேவைக்கேற்ப விசாரணை அதிகாரிகளை நியமிக்க முடியாது - இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

»15

## உணவுப் பஞ்சம் எனும் பேச்சுக்கே இடமில்லை!

அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

இலங்கையில் உணவுப் பஞ்சம் ஏற்பட வாய்ப்பில்லை என்று விவசாய அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்த

»15

மட்டக்களப்பு மயிலத்தமடுவில்

## தமிழ்ப் பண்ணையாளர்களுக்கு ஆயுதமுனையில் அச்சுறுத்தல்!

சிங்களக் காடையர்கள் அடாவடி

மட்டக்களப்பு, ஜூலை 1

மட்டக்களப்பு மயிலத்தமடு - மாதவனை பகுதியில் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள மக்கள், தமிழ்ப் பண்ணையாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு ஆயுத முனையில் மிரட்டல் விடுத்துள்ளனர். மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் தமது பாரம்பரிய மேய்ச்சல் தரை உரிமைக்காக தமிழ்ப் பண்ணையாளர்கள் கடந்த

»15

கிளிநொச்சியில் விபத்துகளால்

## 6 மாதங்களில் 17 மரணங்கள்

விரிவு பக்கம்:- 07

## நாட்டின் பணவீக்கம் சடுதியாக உயர்வு!

கொழும்பு, ஜூலை 1

நாட்டின் பணவீக்கம் சடுதியாக உயர்ந்துள்ளது என்று இலங்கையின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

»15

வவுனியா மாநகரசபையின்

## செங்கோலைத் தூக்கிச்சென்றாரா முன்னாள் முதல்வர் காண்டீபன்?

பொலிஸாரிடம் முறைப்பாடு



வவுனியா, ஜூலை 1

வவுனியா மாநகரசபையின் செங்கோல் முன்னாள் முதல்வரால் முறைப்படி ஒப்படைக்கப்படவில்லை என்று வவுனியா நகரசபைச் செயலாளரால் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. வவுனியா மாநகர சபையின் முதல்

»15

## ஐ.எம்.எப். திட்டங்களை செயற்படுத்துவதில் உறுதி

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 1

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களைச் செயற்படுத்துவதில் இலங்கை உறுதியுடன் உள்ளது - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

»15

## நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் இலங்கை மிகச்சிறந்த முன்னேற்றம்

நாணய நிதியம் பாராட்டு

»15

## வவுனியா நகரசபையினரே செங்கோலை வழங்கினர்!

திருப்பி ஒப்படைத்தும் ஏற்கவில்லை
முன்னாள் முதல்வர் காண்டீபன் விளக்கம்

வவுனியா, ஜூலை 1

வவுனியா நகரசபையின் செங்கோலை நான் எடுத்துச் செல்லவில்லை. மாறாக, வவுனியா நகரசபையினரே அதை அனுப்பி வைத்தனர் - இவ்வாறு முன்னாள் முதல்வர் காண்டீபன் உதயனுக்

»15

முச்சந்தி முராரி

"ஒரு செங்கோலை வைச்சு இன்னும் என்னென்ன அக்கப்போரெல்லாம் வரப்போகுதோ ?"

மக்கள் ம... மிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**
திகதி: 30.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 4476
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 50 | 51 | 63 | 64
விசேட எழுத்து: E

**ஹந்தஹஹ ராசி சுப பலன்**
திகதி: 30.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 1543
வெற்றி இலக்கினம்: கடகம்
வெற்றி இலக்கங்கள்: 16 | 17 | 19 | 30

**NLB ஜய**
திகதி: 30.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0502
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 2 | 7 | 5 | 2

**மெகா பவர்**
திகதி: 30.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2582
ஆங்கில எழுத்து: F
சுப்பர் இலக்கம்: 12
வெற்றி இலக்கங்கள்: 04 | 25 | 29 | 50

**மஹஜன சம்பத**
திகதி: 30.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 6234
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கங்கள்: 3 | 5 | 7 | 8 | 8 | 2

**தன நிதானய**
திகதி: 30.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2264
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 21 | 39 | 47 | 65
விசேட எழுத்து: E

**சுப தவசக்**
திகதி: 30.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0350
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 01 47 66

# இலங்கை தெங்கு ஏற்றுமதியில் 514 மில்லியன் டொலர் வருவாய்

கொழும்பு,ஜூலை 1

**இந்த ஆண்டின் ஜனவரி முதல் மே வரையான காலப்பகுதியில் இலங்கையின் தெங்கு ஏற்றுமதி வருமானம் 514 மில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரித்துள்ளது. 2025ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 21 சதவித வளர்ச்சியாகும் என தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் தெரிவிக்கையில்,

மத்திய கிழக்கில் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக கப்பல் போக்குவரத்துப் பாதைகளில் ஏற்பட்டுள்ள தடைகள், கப்பல் கட்டணங்கள் மற்றும் காப்புறுதிச் செலவுகள் அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலை உயர்வு போன்ற சவால்களுக்கு மத்தியிலும் இந்த வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது.

தேங்காய் விளைச்சல் அதிகரித்தமை மற்றும் ஏற்றுமதிக்கான தேவைப்பாடு உயர்ந்தமை ஆகியன இந்த வளர்ச்சிக்கு முக்கியமான காரணங்களாக அமைந்துள்ளன.

எனினும் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக செவ்விளநீர் ஏற்றுமதி சுமார் 33 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையின் செவ்விளநீர் ஏற்றுமதியில் சுமார் 95 சதவீதம் டுபாய் சந்தைக்கே மேற்கொள்ளப்படுவதனால் இந்த நிலைமை பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது- என்றார். (ச-இ)

## கைத்துப்பாக்கி, தோட்டாக்களுடன் இளைஞர் கைது

கொழும்பு,ஜூலை 1

9 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கி ஒன்று மற்றும் 30 தோட்டாக்களுடன் இளைஞர் ஒருவர் மத்திய குற்றவியல் பணியகத்தின் நிதி மற்றும் வர்த்தக குற்றவிசாரணைப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன்போது, சந்தேகநபரிடம் இருந்து விற்பனைக்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 8 கிராம் 'குஷ்' போதைப்பொருள் மற்றும் அதனை விற்பனை செய்து ஈட்டியதாக சந்தேகிக்கப்படும் 98,000 ரூபா பணம் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவரிடமிருந்து மீட்கப்பட்ட துப்பாக்கி வேறொரு நபரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## டெங்கு ஒழிப்புப் பணியிலிருந்து விலகும் கிராம அலுவலர்கள்!

கொழும்பு. ஜூலை 1

அரசாங்கத்துடனான தங்களது நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு முறையான தீர்வு காணப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து டெங்கு ஒழிப்புப் பணிகளிலிருந்து விலகி நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக இலங்கை கிராம அலுவலர்கள் தேசிய சங்கம் தெரிவித்துள்ளது. தங்களது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் உரிய முறையில் பதிலளிக்கத் தவறியமையால், நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் டெங்கு ஒழிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்துப் பணிகளில் இருந்தும் முழுமையாக விலகுவதாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த கிராம உத்தியோகத்தர் அதிகாரிகளின் தொழிற்சங்கக் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் புத்திக ரங்கன,

தங்களது பயணச்செலவுகளை ஈடுசெய்வதற்கான போதுமான எரிபொருள் கொடுப்பனவு மற்றும் கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஏனைய வசதிகள் போன்ற நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து திருப்திகரமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

டெங்கு நோய் வேகமாகப் பரவி வரும் தற்போதைய சூழலில், அதிக ஆபத்துள்ள பகுதிகள் என்று அடையாளம் காணப்பட்டு 538 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும், இந்த தொழிற்சங்க நடவடிக்கையைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. எனவே ஆபத்தான நிலைமை கருத்திற்கொண்டு அரசாங்கம் உடனடியாக தலையிட்டு எங்களது குறைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 30.06.2026 | தினம்: செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 0942
DLB
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கம்: 6 | 9 | 6 | 7 | 7 | 6

**Super Ball DLB**
திகதி: 30.06.2026 | தினம்: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3208
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கம்: 02 | 12 | 32 | 52

**சனிதா DLB**
திகதி: 30.06.2026 | தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கம்: 04 | 24 | 44 | 78
வெற்றி வாரம்: 5369

**SASIRI DLB**
திகதி: 30.06.2026 | தினம்: செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 1038
வெற்றி இலக்கம்: 04 | 22 | 48

**லக்ன ராசி**
திகதி: 30.06.2026 | தினம்: செவ்வாய்க்கிழமை
மீனம்
வெற்றி இலக்கம்: 01 | 03 | 10 | 35
சீட்டிழுப்பு வாரம்: 4920
DLB

**KAPRUKA DLB**
திகதி: 30.06.2026 | தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: C
சுப்பர் இலக்கம்: 16
வெற்றி இலக்கம்: 37 | 56 | 61 | 62
வெற்றி வாரம்: 2384

**அத கோடிபதி DLB**
திகதி: 30.06.2026 | தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கம்: 16 | 38 | 61 | 71
வெற்றி வாரம்: 3034

## புதிய பஸ் கட்டணத் திருத்தம்; இல்லையேல் சட்ட நடவடிக்கை

தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை



கொழும்பு. ஜூலை 1

வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தக் கொள்கைக்கு அமைவாக, திருத்தப்பட்ட புதிய பேருந்துக் கட்டணங்கள் இன்று புதன்கிழமை முதல் நடைமுறைக்கு வரவேண்டும். இல்லையாயின் நீதிமன்றத்தை நாடுவோம் என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது. இதுகுறித்து அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவிக்கையில்,

வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தக் கொள்கையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டண சரிசெய்தல் குறித்து, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த வருடாந்த கட்டணத் திருத்தம் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இதுவரை எமக்கோ அல்லது ஏனைய தனியார் பேருந்துச் சங்கங்களுக்கோ அழைத்து எந்தவொரு கலந்துரையாடலையும் நடத்தவில்லை.

எதிர்பார்க்கப்படும் பேருந்துக் கட்டணத் திருத்தம் திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தாவிடில் அதற்கு எதிராக சங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கும் - என்றார். (ச-இ)

## அமித் வீரசிங்கவுக்கு விளக்கமறியல்

கொழும்பு. ஜூலை 1

எல்ல மற்றும் திகன பகுதிகளில் சொகுசு விடுதிகளை அமைத்துத் தருவதாகக் கூறி, அரச அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்களிடம் சுமார் 120 மில்லியன் ரூபா பண மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட 'அபினவ நிவஹல் பெரமுன' கட்சியின் தலைவர் அமித் வீரசிங்கவை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் சந்தேகநபரின் சொத்துகள் மற்றும் காணிகள் குறித்து விரிவான விசாரணைகளை முன்னெடுக்க உத்தரவிட்ட நீதிவான், அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதித்ததுடன், அவரது வங்கிக்கணக்குகளை முடக்கவும் பணிப்புரை விடுத்தார்.

இதன்போது சந்தேகநபருக்கு எதிராக இதுவரை 26 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கை நிர்வாக சேவைக்கு 150 பேர் புதிதாக உள்ளீர்ப்பு

கொழும்பு, ஜூலை 1

**இலங்கை நிர்வாசேவைக்கு 150 புதிய அதிகாரிகளை விரைவில் உள்வாங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.**

இலங்கை நிர்வாக சேவையில் அதிக எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதன் காரணமாக அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்கள் உள்ளிட்ட அலுவலக செயற்பாடுகளில் பெரும் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாக குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனடிப்படையில், இந்த நியமனங்களுக்கான போட்டிப் பரீட்சையொன்று விரைவாக நடத்தப்படும்.

குறித்த போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், தற்போதைக்கு இலங்கை நிர்வாக சேவையில் வெற்றிடமாக உள்ள பணியிடங்களுக்கு உரிய நியமனங்கள் செய்யப் படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# தேர்தல் செலவின விவரங்களை சமர்ப்பிக்காவிட்டால் வழக்கு

கொழும்பு, ஜூலை 1

தேர்தல் பரப்புரை செலவின அறிக்கைகளைச் சட்டபூர்வ காலக்கெடுவுக்குள் சமர்ப்பிக்கத் தவறிய வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு எதிராக ஒவ்வொரு மாவட்டத்திலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. இந்த விடயம் குறித்து ஆணைக் குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவிக்கையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறித்த விடயம் சார்ந்த சட்ட நடவடிக்கைகள் எந்தளவில் முன்னேற்றமடைந்துள்ளன என்பது குறித்த விவரங்களை ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ், தேர்தல் முடிவடைந்து 21 நாள்களுக்குள் நிதி ஆதாரங்கள் உள்ளிட்ட விரிவான பிரசார செலவின அறிக்கைகளை வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறியமைக்காகவே நாடு முழுவதும் இவர்களுக்கு எதிராக இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. (ச-இ)

## நீதிபதிகள் ஓய்வு வயது நீடிப்பு

# ஆராயக் கூடுகின்றது நீதிச்சேவைச் சங்கம்!

கொழும்பு, ஜூலை 1

உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பதற்கான அரசாங்கத்தின் சர்ச்சைக்கரிய முன்மொழிவு குறித்து விரிவாகக் கலந்துரையாடுவதற்காக, நீதிச்சேவைச் சங்கம் விசேட பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டுவதற்குத் தீர்மானித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் செயற்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள முடிவின்படி, எதிர்வரும் 11ஆம் திகதி இந்த விசேட பொதுச்சபைக் கூட்டம் கூட்டப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் இந்த ஓய்வுபெறும் வயதெல்லை நீடிப்பு முயற்சிக்கு எதிராக, இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் எதிர்வரும் 4ஆம் திகதி பொதுமக்கள் கருத்துக்கணிப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ள நிலையில், நீதிபதிகள் தரப்பு நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக ஆராய்வதற்கே நீதிச்சேவைச் சங்கம் அவசரக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. (ச-இ)

# படகு கவிழ்ந்து இருவர் சாவு!



கண்டி, ஜூலை 1

கண்டி குருவிதென்ன, தொட்டிலேயாய பகுதியில் அமைந்துள்ள லொக்கல்லா ஓயா நீர்த்தேக்கத்தில் படகொன்று கவிழ்ந்ததில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் 40 மற்றும் 48 வயதுடையவர்களாவர்.

விபத்து நடந்த தருணத்தில் இந்த மிதவைப்படகில் மூன்று சிறுவர்கள் உட்பட 11 சுற்றுலாப் பயணிகள் இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களில் இருவர் பாதுகாப்பு அங்கிகளை அணிந்திருக்காததால் நீரில் மூழ்கி காணாமற் போயிருந்த நிலையில் அவர்களின் சடலங்கள் நேற்றுமுன் தினம் மீட்கப்பட்டதாகக் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# யாழ்.பண்ணைப் பாலத்தில் இளைஞர் குழு அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்.பண்ணைப் பாலப்பகுதியில், மதுபோதையில் ஒன்றுகூடிய இளைஞர் குழுவொன்று நேற்றுமுன்தினம் இரவு பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டது. பண்ணைப் பாலப்பகுதிக்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த இளைஞர்கள், போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்ததுடன், வீதியால் நடந்து சென்றவர்கள் மற்றும் வாகனங்களில் சென்றவர்களை தகாத வார்த்தைகளால் உரக்கக் கத்திக் கூச்சலிட்டனர். இதனால், பண்ணையில் விடுமுறை நாளைக் களிக்க வந்தவர்களும், அப்பகுதி வீதி ஊடாகச் சென்றவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

அந்த இளைஞர்கள் பண்ணைப் பாலத்தின் இரும்புக் கம்பிப் பகுதிகளுக்கு மேல் ஏறி நின்றவாறு சாகசம் காட்டியதையும் அவதானிக்கமுடிந்தது. இவ்வாறான செயற்பாடுகள் தொடராதிருக்க பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (க-66)




# பச்சைக்குத் தடை!

கிளிநொச்சி மாவட்டத்துக்குள்ள இனிமேல் எந்தவொரு 'டாட்டு' எண்டுற பச்சை குத்துற நிலையமும் இயங்கக்கூடாது எண்டு கச்சேரி 'கட் அண்ட் ரைட்டான' ஒரு கட்டளையைப் போட்டிருக்கு. இந்த உத்தரவை மீறி ஆராவது ரகசியமாப் பச்சை குத்தினாலோ, இல்லாட்டி கடை நடத்தினாலோ அவையளுக்கு எதிராச் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எண்டும் கச்சேரிக்காரர் எச்சரிச்சிருக்கினம். சமூக அக்கறையோடயும், பொதுமக்களின்ர பாதுகாப்புக்காண்டியும் எடுத்திருக்கிற இந்த முடிவுக்கு இண்டைய சூழலில நூற்றுக்கு நூறு மார்க்ஸ் குடுக்கலாம். அந்தளவுக்கு திறமான ஒரு முடிவு.

'பச்சை குத்தினால் என்ன? முந்தி நேர்த்திக்காக எல்லாம் பச்சை குத்தி இருக்கினம் தானே? இப்பமட்டுமென்ன தடை போடுகினம்?' எண்டு ஆரும் கேக்கலாம். அந்தக் கேள்வியும் சரிதான். ஆனால் முந்தியும் பச்சை குத்திற ஆக்கள் ஒண்டும் திறமில்லை. ஊர் மைனர்மாரும், சண்டியர்மாரும் தான் கூடுதலா பச்சை குத்திறவை. எண்டாலும் அவையள் குத்திற பச்சையில ஒரு பக்குவம் இருக்கும். சாமியளின்ர உருவங்களையோ, தங்களுக்குப் பிடிச்ச மிருகங்களையோ. கத்தி, வேல் மாதிரி ஆயுதங்களையோ, இல்லாட்டி தங்களுக்குப் பிடிச்சவையின்ர பேரையோ தான் அந்தக் காலத்தில பச்சைகுத்தினவை. ஆனால் இப்ப அப்பிடியோ? கண்ட கண்ட உருவங்களையெல்லாம் உடம்பு முழுக்க பச்சை குத்துகினம். பெடியளிட்ட மட்டும் இருந்த இந்தப் பழக்கம் இப்ப பொம்பிளைப் பிள்ளையளிட்டையும் தொத்திட்டுது. அதுவும் மறைக்கவேண்டிய அங்கங்களில கூட பச்சையைக் குத்திப் போட்டு, அதைப் பப்ளிக்கா காட்டிக்கொண்டு திரியிற பொம்பிளையளும் இதே வடக்கில கனபேர் இருக்கினம். அவைக்கு உந்தப் பச்சை குத்திற இடங்களில இருக்கிற பெடியள் தான், அந்த அங்கங்களில பச்சை குத்திவிடுகினம் எண்டது உபரித்தகவல். வாள்வெட்டுக் கோஷ்டியில திரியிற தறுதலையளும், போதைப்பொருள் பாவிக்கிறவங்களும் தான் இப்ப உடம்பு முழுக்கப் பச்சையைக் குத்திக்கொண்டு அதைவைச்சு ரீல்ஸ் போட்டுக்கொண்டு திரியினம்.

பச்சை குத்த ஆசைப்படுற ஆக்கள் கூடக் கூட, பச்சை குத்திற கடையளும் எல்லா இடங்களிலையும் முளைக்கத் தொடங்கிட்டுது. இப்பிடி பச்சை குத்துற கடையள் போடுறவை அதை எங்க முறைப்படி பழகினவை? ஆர் இவங்களுக்கு அனுமதிப்பத்திரம் குடுத்தது? அவையள் பாவிக்கிற ஊசியள், மையள் எல்லாம் உடம்புக்கு கெடுதி இல்லாதவையோ? எண்ட ஒரு விவரமும் இல்லை. சிலர் யூரியூப்பைப் பார்த்து பச்சைகுத்தப் பழகிட்டு கடை போட்டு உழைக்கினம் எண்டும் கதை. பச்சை குத்திறதொண்டும் மெஹந்தி மாதிரி நாலு நாளில அழியிற விசயமுமில்லை. அது காலம் முழுக்க உடம்பில இருக்கும். அதோட, பச்சை குத்திறதால எய்ட்ஸ் மாதிரி போன்ற பாரதூரமான உயிர்கொல்லி நோய்களும், கல்லீரல் பாதிப்புகளும் வாறதுக்கு சான்ஸ் கூட எண்ட விழிப்புணர்வு எங்கட சனத்துக்கு இல்லை.

இதில ஆகப்பெரிய கொடுமை என்னவெண்டால் இப்பிடி உடம்பில பச்சையைக் குத்துறதால, அவையள் விரும்பினாக்கூட ஒரு வருசத்துக்கு 'ரத்ததானம்' செய்ய ஏலாது. இதால ஆஸ்பத்திரிகளில அவசரத்துக்குச் சனத்துக்குக் குடுக்க ரத்தம் கிடைக்காம, ரத்ததானம் செய்யிறவையளின்ர எண்ணிக்கையும் அநியாயத்துக்குக் குறைஞ்சு கொண்டு போகுதாம்! கிளிநொச்சிக் கச்சேரி எடுத்த இந்த அதிரடி முடிவை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் எண்டு மற்ற தமிழ்ப் பகுதிகளில் இருக்கிற கச்சேரியளும் எடுத்தால் நல்லது! பச்சைகுத்திறதுக்குத் தடையைப் போட்டால், எங்கட இளவட்டங்கள் வீணாப் பந்தா காட்டித் தறிகெட்டுப் போறதை ஓரளவாவது தடுக்கலாம். அதுமட்டுமில்லாம, எய்ட்ஸ் போன்ற கொடிய நோய்கள் எங்கட சமூகத்துக்குள்ள பரவாமலும் காப்பாத்தலாம் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மானிப்பாய் இந்துவின் வருடாந்த நாடகவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த நாடக விழா இன்று புதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் மாலை 6 மணிக்கு, கல்லூரியின் துரைராஜா திறந்தவெளி அரங்கில் நடைபெறும். கல்லூரி அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நாடகமும், அரங்கக் கலைகளும் துறைத் தலைவர் கலாநிதி நவதர்சினி கருணாகரன், சிறப்பு விருந்தினர்களாக தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி. அதிபர் கணேஷ் உதயரூபன், இலங்கை தொலைத்தொடர்புக் கூட்டுத்தாபனம் ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி கமலேஸ்வரி மன்றுலாடி ஆகியோரும், பிரதம நடுவராக யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாபூஷணம் க.இ.கமலநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். நாடக ஆற்றுகைகளாக முதலாம் நாள் மாணிக்கர் இல்ல நாடக ஆற்றுகை, சுந்தரர் இல்ல நாடக ஆற்றுகை, ஆசிரியர்களின் நாடக ஆற்றுகை ஆகியனவும், இரண்டாம் நாள் நிகழ்வாக சம்பந்தர் இல்ல ஆற்றுகை, வாகீசர் இல்ல ஆற்றுகை, பழைய மாணவர்களின் ஆற்றுகை ஆகியனவும் நடைபெறும். (க)

## மடுத் திருத்தலத்தில் புனிதத்தைப் பேணுக

குருமுதல்வர் தமிழ்நேசன் அடிகளார் வேண்டுகோள்

மன்னார், ஜூலை 1

மடுத் திருத்தலத்துக்கு வருகைதரும் பக்தர்கள், ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி தமிழ்நேசன் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் மருதமடு அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு, பக்தர்களுக்கான அத்தியாவசியத் தேவைகள் தொடர்பான மீள் பரிசோதனைக் கூட்டத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். ஆலயச்சூழலில் போதைவஸ்துப் பாவனை, மதுப் பாவனை முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் திருத் தலத்துக்கு வருகைதருவோர் மதிக்கத்தக்க, நாகரீகமான ஆடைகளை அணிந்து வருதல் வேண்டும். போட்டிக்கோவுக்கு முன்னாலுள்ள வளாகத்தில் பக்தர்கள் தங்குவது, திருவிழாத் திருப்பலிக்கு வருகைதருவோருக்கு பெரும் இடையூறாக அமையும். எனவே வெஸ்பர் ஆராதனை முடிந்த பின்னர் யாத்திரிகர்கள் தங்குவதற்கான மண்டபங்கள் இருக்கின்றன. இவற்றிலும் ஏனைய இடங்களிலும் இரவைக் கழிக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-60)



வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மாகாணமட்ட தட்டெறிதல் போட்டியில், யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி ஜெ.அபிஷா இரண்டாம் இடத்தைப்பெற்று, தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார். (க)

## மும்மொழித்தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

கோண்டாவில் இந்துக் கல்லூரியின் மும்மொழித்தினம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் நடேசு தயாளன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக, யாழ். கல்வி வலய (தமிழ்) பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜ்மோகன் கலந்துகொள்வார். (க)

கிளிநொச்சி ஏ-9 வீதியில்

## கனரக வாகனங்களுக்கு போக்குவரத்துக் கட்டுப்பாடு

கிளிநொச்சி, ஜூலை 1

கிளிநொச்சி ஏ-9 வீதியின் இரணைமடுச் சந்தி தொடக்கம் பரந்தன் சந்தி வரை டிப்பர் உட்பட கனரக வாகனங்களுக்குப் போக்குவரத்துக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

வீதி விபத்துகளைத் தடுத்துல் மற்றும் எதிர்கால சந்ததியினரை நல்வழிப்படுத்தல் தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக காலை 7 மணி தொடக்கம் 8 மணிவரைக்கும், பகல் 1 மணி தொடக்கம் 2 மணி வரைக்கும் இரணைமடுச் சந்தி மற்றும் பரந்தன் சந்திக்கு இடைப்பட்ட பகுதியில் கனரக வாகனங்களின் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் ஆரம்பித்தல் மற்றும் நிறைவுறும் நேரத்தைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (க-214)

## பரிசளிப்பும் இதழ் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூலை 1

புத்தூர் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும், மகா ஜனனம்-2 இதழ் வெளியீடும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை முத்துலிங்கம் மண்ட பத்தில் நடைபெறும். அதிபர் பரமநாதன் கமலதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் கலந்துகொள்வார். (க)

## இணுவில் கந்தனின் மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி ஆலய பராபவ வருடப் பெருந்திருவிழாவின் மஞ்சத் திருவிழா இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும். இணுவில் கந்தப்பெருமான் ஆறுமுக வடிவினராக மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்சத்தில் வெளிவீதியில் எழுந்தருளிப் பவனி வரவுள்ளார். (க-66)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் தாமதமாகும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குத் தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரவகையில் வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடியாகமுடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுஎடுப்பதில்பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர்ச் செலவுகளால்கையிருப்புக்கரையும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் கடன்கள் விஷயத்திலும் சற்றுக்கவனம் செலுத்துவது நல்லது.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## INVITATION FOR BID 2026
### Regular Maintenance & Repairs of Air Conditioners
### Regional Directorate of Health Services, Jaffna

1. The Chairman, Regional Procurement Committee on behalf of the Regional Directorate of Health Service, now invites sealed bids from eligible and qualified bidders for the Regular Maintenance & Repairs of Air Conditioners.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall comply the CIDA registration and qualification requirements listed below. Additional details are provided in the Procurement Documents..
4. Interested bidders may obtain further information from the address given below in 4 and inspect the procurement documents at the same place on any working day from 2026.07.01 to 2026-07-21 in between 09:00 hrs and 15:30 hrs.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Director, Regional Director of Health Services Jaffna, Health Village Pannai, Jaffna. (T.P: 021 221 4966 & 021 222 6253, Fax: 021-222 9971) from 09:00 hrs to 15:30 hrs. During the period from 2026.07.01 to 2026-07-21 upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment shall be made in cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services Jaffna, on or before 10.30 a.m on 2026-07-22. Bid ID number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Procurement Committee will have the rights to make final decision in the regarding the acceptance or rejection of Bids.
8. All bids shall be accompanied by a bid security in the form of Bid Security included in Section-IV. The amount and validity of the bid security shall be as per details given in Section -II
9. Pre-Bid Conference will be held at Conference Hall, Office of the Regional Directorate of Health Services, Jaffna Commencing at 10.30 A.M on 2026-07-15.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2026-07-01 until 2026-07-21 |
| Pre-Bid Conference | At 10.30 A.M on 2026-07-15 |
| Closing and Opening of Bids | At 10.30 A.M on 2026-07-22 |

| Lot No | Bid ID | Description of Work | Qualifications | Non-Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Validity Period |
| Lot A | NP/04/41/02/RDHS/2026/AC Service/Chavakachchery Cluster | Regular Maintenance & Repairs of Air Conditioners – 74 Nos | CIDA Registration EM5 or above | 3,000.00 | 29,000.00 | 16-11-2026 |
| Lot B | NP/04/41/02/RDHS/2026/AC Service/Changanai Cluster | Regular Maintenance & Repairs of Air Conditioners – 63 Nos | | 3,000.00 | 24,000.00 | |
| Lot C | NP/04/41/02/RDHS/2026/AC Service/Island Cluster | Regular Maintenance & Repairs of Air Conditioners – 72 Nos | | 3,000.00 | 28,000.00 | |
| Lot D | NP/04/41/02/RDHS/2026/AC Service/Point pedro Cluster | Regular Maintenance & Repairs of Air Conditioners – 73 Nos | | 3,000.00 | 28,000.00 | |
| Lot E | NP/04/41/02/RDHS/2026/AC Service/Main Cluster | Regular Maintenance & Repairs of Air Conditioners – 85 Nos | | 3,000.00 | 25,000.00 | |

Chairman
Regional Procurement Committee
Regional Directorate of Health Services,
Jaffna
01.07.2026

(CR/47767) J-1

## UDUVIL GIRLS' COLLEGE

கல்வி சார் ஊழியர்கள்

எமது பாடசாலையில் வழிகாட்டல் ஆலோசனை (Counsellor) ஆசிரியருக்கான வேலைவாய்ப்பு காணப்படுவதால் தகுதியான பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் சுயவிபரக்கோவையையும், சான்றிதல்களையும் அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில் என்ற முகவரிக்கு 10.07.2026 முன்னதாக அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்குட்பட்ட பெண் பட்டதாரிகள்.

**Principal**

CR/47768) J-1

## வேலையாட்கள் தேவை

ஆனைக்கோட்டையில் இயங்கி வரும் பிரபல சைவ உணவகமொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. ரொட்டி போடுபவர் 2. உணவு பரிமாறுபவர்

ஆண், பெண் இருபாலாரும்

தொடர்புகளுக்கு:-

**075 474 5076, 075 404 0246**

(CS/61788) J-1

# கொழும்பு –கட்டார் இடையே விமானசேவை அதிகரிப்பு!

கொழும்பு,ஜூலை 1

கொழும்புக்கான தமது விமானசேவைகளை அதிகரிக்க கட்டார் எயார்வேஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இம்மாதம் முதலாம் திகதி முதல் கொழும்பு நோக்கிய தனது விமான சேவைகளை மேலும் விரிவுபடுத்தவுள்ளது.

அதற்கமைய,, நாளொன்றுக்கு 5 விமானங்கள் வீதம் சேவை களை முன்னெடுக்கவுள்ளன.

இதன்மூலம் வாரத்துக்கு 35 விமானங்கள் பயணிக்கும் என கட்டார் எயார்வேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-இ)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யா/சங்குவேலி அ.த.க. பாடசாலையின் 125ஆவது நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை மதியம் 1மணிக்கு வைத்திலிங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஸ்ரீகரன் உமாச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு பல்கலைக்கழக பழையமாணவனும் பேராசிரியருமான பொன்னம்பலம் ஜெயவிக்கிரமராஜா, சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக்கல்வி அலுவலக கோட்டக் கல்விப்பணிப்பாளர் சோமசுந்தரம் இராமநாதன், கௌரவ விருந்தினர்களாக ஸ்தாபகரின் பேரன் கே.வி.கே.விஜயசுந்தரம், எதிர்காலத்திற்கான சுற்றுப்புறச்சூழல் கழகத்தலைவரும் ஸ்தாபகரின் பூட்டனுமான லிங்கநாதபிள்ளை கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இதன்போது நினைவுப்பேருரையை சிரேஸ்ட சட்டத்தரணியும் தமிழ் சட்டத்தரணிகள் பேரவைத் தலைவரும் பழைய மாணவனுமான கே.எஸ்.இரத்தினவேல் ஆற்றுவார். (41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரச ஊழியர்களுக்கு காலாவதியாகும் அரிசி!

## நட்டத்தில் தப்பிக்க அரசு தந்திரம்
## தேசிய விவசாய ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 1

காலாவதியாகும் நிலையில் உள்ள 70,000 மெற்றிக் தொன் அரிசியை அரசாங்க ஊழியர்களுக்குக் கடன் அடிப்படையில் வழங்கி நட்டத்திலிருந்து தப்பிக்க தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற பலத்த சந்தேகம் எழுந்துள்ளது. இந்தத் திட்டம் அரச ஊழியர்களின் கௌரவத்தை பாதிக்கும் செயலாகும் என தேசிய விவசாய ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

நெல் சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்யப்பட்டு தற்போது களஞ்சியசாலைகளில் காலாவதியாகும் நிலையில் 115,000 மெற்றிக் தொன் நெல் இருப்பு காணப்படுகிறது. அதனை அரிசியாக்கி அரசாங்கம் கடன் அடிப்படையில், வழங்குவதற்கு வர்த்தத்தக அமைச்சர் முடிவு செய்து உள்ளமை அரச ஊழியர்களின் கௌவரத்தை மட்டுப்படுத்தும் செயலாகும்.

குறிப்பிட்ட நெல் இருப்பை அரிசியாக்கும் போது சுமார் 71,875 மெற்றிக் தொன் அரிசி கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை விலங்கு உணவாக மாற்றி விற்பனை செய்வதற்கு முன்னர் நாட்டின் சுமார் 14 இலட்சம் அரச ஊழியர்களுக்கு தவணை முறையில் வழங்கி விநியோகிக்க அரசாங்கம் திட்டமிடுகிறது.

சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்தவும், எதிர்வரும் சிறுபோக நெல் அறுவடையை முறையாகக் கொள்வனவு செய்யும் வசதியாக களஞ்சியங்களில் உள்ள நெல் இருப்புகளை அரிசியாக்கி சந்தைக்கு விடுவிக்குமாறு விவசாய அமைப்புகள் பலமுறை கோரிக்கை விடுத்தும் அதிகாரிகள் அதனைப் பொருட்படுத்தவில்லை. இதன் காரணமாகவே தற்போது இந்த நெல் இருப்புகள் விலங்கு உணவாக மாற்றப்படும் துரதிஷ்டவசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் தம்மீது சுமத்தப்படும் நிர்வாகத் தோல்வி மற்றும் நட்டம் குறித்த குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பிக்கவே அரசாங்கம் இந்தத் தந்திரத்தைத் கையாள்கிறது. இது ஒட்டுமொத்த அரச சேவையின் கௌரவத்தின் மீது விழுந்த ஒரு கறையாகும் - என்றார். (ச-இ)

# நீதித்துறையின் சுதந்திரத்தில் இலங்கை அரசு தன்னிச்சை!

## ஆசிய பசுபிக் பிராந்திய சட்டச் சங்கம் கண்டனம்

**கொழும்பு, ஜுலை 1**

**இலங்கை உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதற்காக அரசாங்கம் கொண்டுவரவுள்ள அரசியலமைப்புத் திருத்தம் குறித்து ஆசிய பசுபிக் பிராந்திய சட்டச்சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.**

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் தலைவர் டி.எல். யாப் விடுத்துள்ள அறிக்கையில்,


முறையான திட்டமிடலின்றி அவசர அவசரமாக முன்னெடுக்கப்படும் இத்தகைய தற்காலிக நடவடிக்கைகள், நீதித்துறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை கடுமையாக சீர்குலைப்பதுடன் அதன் சுதந்திரத்தையும் ஆபத்துக்குள்ளாக்குகிறது.

பொதுமக்கள் அல்லது சட்டத்துறையின் ஏனைய பங்குதாரர்களுடன் எவ்வித முறையான கலந்தாலோசனைகளும் இன்றி, அரசாங்கம் இந்த அரசியலமைப்பு திருத்தத்தை தன்னிச்சையாக முன்னோக்கி நகர்த்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த மே 25 அன்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்த கடிதத்தில், தற்போதைய சூழ்நிலையில் பதவியில் இருக்கும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை மாற்றுவது 'நீதித்துறையில் தன்னிச்சையாக தலையிடும் ஒரு வெளிப்படையான முயற்சியாகவே' பார்க்கப்படும் என்று சுட்டிக்காட்டியிருந்தது.

இந்த நிலைப்பாட்டுடன் சர்வதேச அமைப்பான பொதுநலவாய சட்டத்தரணிகள் சங்கமும், ஆசிய பசுபிக் பிராந்திய சட்டச் சங்கமும் முழுமையாக உடன்படுகின்றன.

எனவே நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை அதிகரிக்கும் நோக்கில் முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்புத் திருத்தங்களை மேற்கொண்டு முன்நகர்த்துவதைத் தவிர்க்கவேண்டும். அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படும் இத்தகைய தற்காலிக மற்றும் சுயலாபத் திருத்தங்களை முற்றிலும் கைவிடவேண்டும். நாட்டில் சட்டத்தின் ஆட்சியுறுதி மற்றும் நீதித்துறை சுதந்திரத்திற்கான மரியாதையைப் பாதுகாப்பதை இலங்கை அரசு உறுதி செய்யவேண்டும் - என்றார். (ச-இ)



# பிக்குகள் கௌரவத்துக்கு தனி நீதிமன்றம் தேவை!

## லாங்கொட கஸ்ஸப்ப தேரர் வலியுறுத்து

கொழும்பு, ஜுலை 1

இலங்கையில் பௌத்த துறவிகள் எதிர்கொள்ளும் ஒழுக்க நெறி, ஒழுக்கக் கோவை மீறல்கள் மற்றும் சிவில் பிரச்சினைகளைக் கையாள்வதற்கும், அவர்களைப் பாதுகாப்பதற்கும் என பிரத்தியேகமான விசேட பௌத்த நீதிமன்ற கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என பலாங்கொட கஸ்ஸப்ப தேரர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் முதன்மையான கடமையாகும். துறவிகளின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் தனித்துவமான விசேட நீதிமன்றக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இலங்கையில் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தின் தனிநபர் விவாக, விவாகரத்து மற்றும் விசேட சிவில் சலுகைகளைக் கையாள்வதற்காக காதி நீதிமன்றங்கள் சட்டபூர்வமாக இயங்கி வருகின்றன.

ஆனால், அரசியலமைப்பில் மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட்ட பௌத்த சாசனத்தின் உன்னத துறவிகளுக்கான ஒழுக்கநெறிப் பிரச்சினைகளைத் தீர்க்க, இதுவரையில் ஒரு விசேட நீதிமன்ற கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை. இது வரலாற்றுத் துரோக குறைபாடாகும். பௌத்த சாசனத்தின் சுயாதீனத் தன்மையைப் பேண அரசுகள் தவறியதன் விளைவாகவே, துறவிகள் சாதாரண சிவில் நீதிமன்றங்களுக்கு இழுக்கப்பட்டு அவமதிப்புகளுக்குள்ளாகும் அவல நிலை தொடர்கிறது. எனவே அரசியலமைப்பின் மூலம் பௌத்தத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை நிலைநாட்ட இத்தகையதொரு விசேட நீதித்துறைக் கட்டமைப்பு அவசியமானது - என்றார். (ச-இ)

# மக்கள் வரிப்பணத்திலேயே மக்களுக்கு நிவாரணங்கள்!

## திலித் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 1

நாட்டில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் படி, கடந்த 3 வருடங்களுக்கும் மேலான காலப்பகுதியில் மக்களின் உண்மையான வருமானம் எந்தவகையிலும் அதிகரிக்கவில்லை. உங்களுக்கே வரி விதித்து அந்தப் பணத்தையே திரும்பக் கொடுப்பனவாக கொடுக்கிறார்கள் என சர்வஜன அதிகாரம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அஸ்வெசும, முதியோர் கொடுப்பனவு மற்றும் ஆசிரியர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட அனைத்து கொடுப்பனவுகளும் அரசாங்கத்தினால் புதிதாக உருவாக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டவை அல்ல. இல்லாத ஒரு நிதியை அல்லது இருந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட பணத்தையே அரசாங்கம் மக்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளது. சுருக்கமாகக் கூறின், உங்களுக்கே வரி விதித்து, அந்தப் பணத்தையே உங்களுக்கே திரும்பக் கொடுத்துள்ளார்கள். இதனால் பொருளாதாரம் முற்றிலும் சுருங்கி, வணிகங்கள் இயங்காமல், மக்களின் கைகளில் பணம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. தங்களின் ஆட்சியைத் தக்கவைப்பதற்காக மக்களைச் சுரண்டி, தங்களின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதே இவர்களின் நோக்கமாகும் - என்றார். (ச-இ)

# திருடர்களைப் பிடிப்பதுபோன்று கொள்ளையிடும் அரசாங்கம்!

## ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 1

முன்னாள் அரசாங்கத்தினர் செய்த திருட்டுகள் மற்றும் மோசடிக்காரர்களைப் பிடித்துவிட்டு, அதற்குப் பதிலாகத் தற்போதைய ஆட்சியாளர்கள் திருடுவதற்கும் மோசடி செய்வதற்கும் தானா நாட்டு மக்கள் இவர்களுக்கு ஆணை வழங்கினார்கள்? என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ராஜித சேனாரத்ன கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுங்கத்திலிருந்து அண்மையில் 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. அதில் இரண்டு கொள்கலன்களில் ஆபத்தான போதைப்பொருள்கள் இருந்ததாக அரசாங்கமே ஒப்புக்கொண்டது. உலக வரலாற்றிலேயே 'சிவப்பு எச்சரிக்கை' விடுக்கப்பட்ட கொள்கலன்களைத் துறைமுகத்தை விட்டு வெளியே அனுப்பியிருப்பது இதுவே முதல்முறையாகும். இது அப்பட்டமான மோசடி இல்லையா? இதுகுறித்து இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவோ அல்லது குற்றப்புலனாய்வுப் பிரிவோ ஏன் இன்னும் விசாரிக்கவில்லை?

தற்போது ஏற்பட்டுள்ள மின்சார மற்றும் எரிபொருள் கட்டண உயர்வுக்கு சர்வதேசக் காரணிகள் காரணமல்ல, மாறாக அரசாங்கத்தின் தவறான முகாமைத்துவமே காரணம். நிலக்கரி இறக்குமதியில் நடைபெற்ற தில்லுமுல்லுகள் காரணமாக, அவசரமாக டீசல் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் பில்லியன் கணக்கில் மக்கள் பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் பல பில்லியன் ரூபா பெறுமதியான இந்த ஊழல்களை மூடிமறைத்துவிட்டு, வெறும் இலட்சக்கணக்கிலான சிறிய மோசடி வழக்குகளை விசாரிப்பதாக நாடகமாடுகிறது.

மக்களின் பசியைப் போக்கமுடியாத இந்த அரசாங்கம், தங்களின் சொந்த ஊழல் குற்றச்சாட்டுகளை மறைப்பதற்காக எதிர்க்கட்சியினரை 'அரசியல் பழிவாங்கல்' என்ற பெயரில் வேட்டையாடுவதில் மட்டும் குறியாகச் செயற்பட்டு வருகிறது. மக்களின் பசி என்பது இறுதியில் தற்போதைய ஆட்சிக்கு எதிராகப் பெரும் புரட்சிக்கு வழிவகுக்கும்- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# டெங்கு ஒரு தேசியப் பேராபத்து!

இலங்கையில் டெங்குத் தொற்றுப் பரவல் தற்பொழுது என்றுமில்லாதவாறு பெரும் பொதுச்சுகாதார நெருக்கடியாக உருவெடுத்துள்ளது. நாடளாவிய ரீதியில் பதிவாகியுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை *54,000* என்ற அபாயகரமான எல்லையைத் தாண்டியுள்ளதுடன், நாளொன்றுக்கு ஆயிரம் வரையிலான புதிய நோயாளர்கள் கண்டறியப்பட்டு வருகின்றனர். விசேட டெங்குக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் நாடு முழுவதும் முடுக்கிவிடப்பட்டுள்ள போதிலும், தொற்றாளர்களின் எண்ணிக்கையில் எவ்வித வீழ்ச்சியும் ஏற்படவில்லை என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளமை, இந்தத் தொற்று எந்தளவு தீவிரமடைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. தற்போதைய நிலையில் *124* வலயங்கள் அதிக அவதானமிக்க பகுதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளதோடு, *31* உயிர்கள் பலியாகியுள்ளமை இந்தத் தொற்றின் கொடூரத்தன்மைக்குச் சான்றாகும்.

இந்தக் கட்டுக்கடங்காத பரவலானது ஒட்டுமொத்த சமூகத்திற்கும், நாட்டின் சுகாதாரக் கட்டமைப்புக்கும் விடுக்கப்பட்டுள்ள பெரும் சவாலாகும். தீவிரமான காய்ச்சல், குருதிப் போக்கு மற்றும் உடலின் முக்கியமான உறுப்புகள் செயலிழத்தல் போன்ற கடுமையான விளைவுகளை டெங்கு ஏற்படுத்துகிறது. தினசரி ஆயிரக்கணக்கான நோயாளர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் போது, அது நாட்டின் படுக்கை வசதிகள், மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களின் உழைப்பை மிகக் கடுமையாகப் பாதிக்கிறது. ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வரும் ஒரு சுகாதாரக் கட்டமைப்பு, இத்தகையதொரு தொடர் பேரிடரைத் தாங்கிக்கொள்வது சாத்தியமற்றது. எனவே, இதனை வெறும் தற்காலிகக் காய்ச்சலாகக் கடந்து செல்லாமல், உயிர்களைப் பலிவாங்கும் ஒரு தேசியப் பேராபத்தாகக் கருதிச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். நோய் பரவுவதற்கான பிரதான காரணியாக விளங்கும் நுளம்புப் பெருக்கக் களங்கள் மனித அலட்சியத்தினாலேயே உருவாக்கப்படுகின்றன என்பதைத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஜூன் மாதத்தில் மாத்திரம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் சோதனையிடப்பட்ட *85* ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில், *7* ஆயிரத்துக்கும் அதிகமானவை நுளம்புகள் பெருகும் இடங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. பாடசாலைகள், கட்டுமானத் தளங்கள், பொது இடங்கள் மற்றும் வீடுகளிலேயே இந்த அபாயகரமான சூழல் காணப்படுகிறது. தொடர்ச்சியான மழைக்காலநிலை நிலவும் தற் போதைய சூழலில், தேங்கிநிற்கும் தூயநீர்நிலைகளை உடனுக்குடன் அகற்றத் தவறுவது டெங்கு அரக்கனுக்கு நாமே சிவப்புக் கம்பளம் விரிப்பதற்கு ஒப்பானதாகும்.

இந்த அவசரச் சூழலில் இருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டுமாயின், வெறும் விழிப்புணர்வுப் பிரசாரங்களை மட்டும் நம்பியிருக்காமல், கடுமையான மற்றும் துரிதமானகூட்டுநடவடிக்கைகள் உடனடியாகப்பின்தொடரப்பட வேண்டும். உள்ளூர் அதிகாரசபைகள், பொதுச் சுகாதாரப் பிரிவினர் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் ஒன்றிணைந்து அதிக அவதானமிக்க வலயங்களிலும் தொடர்ச்சியான துப்புரவுப் பணிகளையும், புகை விசிறல் நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும். நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை அசுத்தமாக வைத்திருக்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக எவ்வித தயவுதாட்சண்யமுமின்றி கடுமையான சட்ட நடவடிக்கைகளும், அபராதங்களும் விதிக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் பொறிமுறைகளுக்கு இணையாக, பொதுமக்களின் தனிப்பட்ட பொறுப்புணர்வும் இங்கு இன்றியமையாததாகிறது. ஒவ்வொரு குடிமகனும் தனது வீடும், அதனைச் சூழவுள்ள பகுதிகளும் நீர் தேங்காதவாறு தூய்மையாக இருப்பதை உறுதி செய்யவேண்டும். அதேபோன்று, காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டவுடன் சுயமருத்துவத்தைத் தவிர்த்து, உடனடியாக தகுதிவாய்ந்த மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் உயிரிழப்புகளை முற்றாகத் தடுக்கமுடியும். அதிகாரிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய முத்தரப்பும் ஒருங்கிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மட்டுமே, இந்த டெங்குப் பேரலையைக் கட்டுப்படுத்தி பெறுமதிமிக்க உயிர்களைப் பாதுகாக்க முடியும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்**

**பொருள்:** வரம்பு கடந்து நடப்பவரின் வாயில் பிறக்கும் கொடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் துறந்தவரைப் போலத் தூய்மையானவர் ஆவர்.




# கிளிநொச்சியில் விபத்துகளால் 6 மாதங்களில் 17 மரணங்கள்!



## மதுபோதை வழக்குகளும் இருமடங்கு அதிகரிப்பு

**கிளிநொச்சி,ஜூலை 1**
**கிளிநொச்சி மாவட்டத்தில் நடப்பு 2026ஆம் ஆண்டின் கடந்த 6 மாதங்களில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் 17 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தரவுகள் தெரிவிக்கின்றன.**

நகரப்பகுதியில் அதிகரித்த வேகம் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்தியமையே இதற்கு முக்கியமான காரணங்களாகும்.
ஜனவரி முதல் மே வரையான 5 மாதங்களில் 68 விபத்துகள் பதிவாகி, 14 பேர் உயிரிழந்துள்ளனர்.
தொடர்ந்து ஜூன் மாதத்தில் உமையாள்புரம், உருத்திரபுரம் மற்றும் கிளிநொச்சி பொலிஸ் நிலைய வீதிகளில் நேர்ந்த விபத்துகளில் மேலும் 3 பேர் பலியாகினர்.
கடந்த 2023 முதல் 2025 வரையான மூன்றாண்டு காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் 417 விபத்துகள் நிகழ்ந்துள்ளதோடு, 89 பேர் உயிரிழந்துள்ளனர்.
இதேவேளை, நடப்பு ஆண்டின் முதல் 5 மாதங்களில் மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக 968 வழக்குகளும், அபாயகரமான முறையில் செலுத்தியதாக 162 வழக்குகளும் பதிவாகியுள்ளன.
மேலும், கிளிநொச்சியில் முதன் முறையாக கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் பாவித்து வாகனம் செலுத்தியமைக்காக 23 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச-55)

## டொலர் பெறுமதி சற்றுச் சரிவு

கொழும்பு, ஜூலை 1
இலங்கை மத்திய வங்கியால் நேற்று வெளியிடப்பட்டுள்ள நாணய மாற்று விகிதத் தரவுகளின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை சற்றுக் குறைவடைந்துள்ளது.
நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 341.30 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலரின் விற்பனை விலை 341.87 ரூபாவாகக் காணப்பட்டது. வெளிநாட்டு நாணய சந்தையின் நகர்வுகள் மற்றும் பொருளாதாரக் காரணிகளுக்கு அமைவாக நாணய மாற்று விகிதங்களில் இத்தகைய தினசரி மாற்றங்கள் ஏற்படுவதாகப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

## புறப்பட்டது ஐ.எம்.எப். குழு

கொழும்பு, ஜூலை 1
இலங்கைக்கு வந்திருந்த சர்வதேச நாணயநிதியத்தின் பணிக்குழாமினர் நேற்று நாட்டிலிருந்து புறப்பட்டுள்ளனர். இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் சீர்திருத்தங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய அவர்கள் கடந்த 24ஆம் திகதி வந்திருந்தனர்.
மத்திய கிழக்கின் யுத்தச் சூழலுக்கு மத்தியிலும், இலங்கை அதிகாரிகள் எடுத்த விரைவான நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்க முடிந்ததாக நாணயநிதியத்தின் இலங்கைக்கான பிரதானி ஈவன் பெபஜியோர்கியு தெரிவித்துள்ளார். நாட்டில் செயற்படுத்தப்பட்டு வரும் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் காரணமாகவே இவ்வாறான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் பலம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



## டெங்கைக் கட்டுப்படுத்த ட்ரோன் கண்காணிப்பு

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு ,ஜூலை 1
டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, அதிகாரிகள் நேரடியாகச் சென்று சோதனையிட முடியாத மற்றும் பூட்டப்பட்டு கைவிடப்பட்டுள்ள கட்டடங்களின் கூரைகள், மொட்டை மாடிகளைக் கண்காணிக்க நவீன ட்ரோன் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருவதாகச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். நாட்டில் உள்ள 14 மாவட்டங்களைச் சேர்ந்த 124 சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் டெங்கு அபாயம் அதிகமாகக் கண்டறியப்பட்டுள்ளதுடன், மேல் மாகாணத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 700 முதல் 800 நோயாளிகள் சிகிச்சைக்காக வருவதால் மருத்துவமனைகளில் நெருக்கடிகள் ஏற்படுவது இயல்பானதே எனக் குறிப்பிட்ட அமைச்சர், தற்போதைய நிலைமை படிப்படியாகக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு வருவதாகவும், இதற்குப் பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம் என்றும் கேட்டுக்கொண்டார். (ச-44)

**நாளை** 02.07.2026
வியாழக்கிழமை-ஆனி 18
சுபநேரம் : 04.26 – 05.56
ராகுகாலம் : 11.56 – 01.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நீதிபதிகள் ஓய்வு வயது நீடிப்பு

# பொதுமக்களிடம் கருத்துகளைக் கேட்கும் சட்டத்தரணிகள் சங்கம்!

கொழும்பு, ஜூலை 1

உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பது குறித்து பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டறிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 4ஆம் திகதி இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பதற்கான அரசாங்கத்தின் முன்மொழிவு குறித்து கலந்துரையாடுவதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயற்குழு அண்மையில் கூடியிருந்தபோதே குறித்த முன்மொழிவை நடைமுறைப்படுத்தவேண்டாம் என ஜனாதிபதியிடம் எழுத்துபூர்வமாக கோரிக்கை விடுக்க தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் இதுகுறித்து பொதுமக்களின் கருத்துகளைப் பெற்றுக்கொள்வதற்கும் முன்மொழியப்பட்டது. இதன்படி, எதிர்வரும் 4ஆம் திகதி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் சபை கூட்டத்தின் பின்னர், குறித்த பொதுமக்களின் கருத்துகளைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 09 . 1959

மறைவு 30 . 06 . 2026

### குமாரசாமி தனபாலசிங்கம்

நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் இல.56, மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (30.06.2026) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான வே.செல்வரசா - செ.தவமணி தம்பதியரின் மருமகனும், தனபாலசிங்கம் அஜந்தா அவர்களின் அன்புக் கணவரும், துவாரகா, கோகுல்ராம், துஷாரகி, கீர்த்தனராம் ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜரூபன், கலைக்சினி, கிரிவரன், சங்கீதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கௌதம், தாரிகா, ஷர்வன், ஹர்ஷிகா, யுகனிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2026)புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
070 6700 223

(CS 32074) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 07 . 1938

மறைவு 29 . 06 . 2026

### தம்பிராசா இராசம்மா (றோசு)

சண்டிலிப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கு சத்தியபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட றோசு என அழைக்கப்படும் தம்பிராசா இராசம்மா அவர்கள் கடந்த (29.06.2026) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரன் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு - இலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான ஜமுனிராணி, கமலராசா, விமலராணி, டெஸ்சிராணி, இரட்ணராஜா மற்றும் ரவீந்திராசா (சீலன் - கொழும்பு), யூதராஜா (திட்ட இணைப்பாளர், அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை மற்றும் தலைவர், YMCA யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் நேசமலர், புலேந்திரராசா, மதுவீசுலினி சுபசிங்க, கேதாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜித் (விஞ்ஞானி), சாந்தினிதேவி (குடும்பநல உத்தியோகத்தர்), சுஜீவா, சகுந்தலாதேவி (ஆசிரியை, யா/உடுவில் மகளிர் கல்லூரி), சஞ்சீவி (ஆசிரியை, யா/ சென்ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை), திவாகர், ரமேஸ் பிரசாந் (கொழும்பு), விதிசா, அபிசாய், ஜக்சன், கலைவாணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கொழும்பு மாவட்ட செயலகம்), பகீஸ்கரன் (பாடசாலை ஊழியர், யா/ ஆனைப்பந்தி மெ.மி.தா.கா பாடசாலை), சாள்ஸ் அன்ரனி (Senior sales executive officer Rotax(Pvt)Ltd Colombo), வினோத் கணேசன் (உரிமையாளர், Kings Sound), நரேஸ்நிக்ஸன் (மேற்பார்வையாளர், Jetwing Hotel), ரமணி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கிருத்யா, மனோஜ், அஹசியா, ஸ்ரொபியஸ் டீக்கன், ஏகஸ்ரஸ், ஆபிரகாம் நிக்ஸன், கிதியோன் ஆகியோரின் அன்பு பூட்டியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, சோதிபிள்ளை, பூமணி, அன்னலஷ்மி மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், வைத்திலிங்கம், இரத்தினசபாபதி, தவமலர், ருக்மணி, ரோசாமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிவழிபாடு இன்று (01.07.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**யூதராஜா (மகன்) - 077 322 3221**
**சத்தியபுரம், உடுவில் தெற்கு, சுன்னாகம்.**

(CS/61792) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 03 . 1960

மறைவு 29 . 06 . 2026

### சந்திரா யோகநாதன்

அம்பன் குடத்தனையைப் பிறப்பிடமாகவும், திகிரி ஒழுங்கை, தும்பனை மேற்கு பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட சந்திரா யோகநாதன் அவர்கள் கடந்த (29.06.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தருமபாலகிருஷ்ணன் - இராசம்மா தம்பதியரின் பாசத்திற்குரிய சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட மருமகளும், காலஞ்சென்ற யோகநாதன் அவர்களின் அன்புக்குரிய மனைவியும், திருமதி மஞ்சுளா தேவதர்சன், திருமதி கௌசல்யா கிருசாந்தன், திரு. யோ.காண்டீபன், திருமதி கார்த்திகா தயானந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு. இராசமோகன், திரு. விக்னேஸ்வரன், திருமதி சித்திரா இந்திரகுமார், திரு. மனோகரன் (லண்டன்), திருமதி தாட்சாயினி சந்திரகுமார் (ஜேர்மனி), திரு. கண்ணன், திரு. ரகுராஜன், காலஞ்சென்ற முருகையன், திரு. பராபரன், திரு.குருபரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருமதி லலிதாம்பிகை, திருமதி பிரபாதேவி, திருமதி சுகிர்தாம்பிகை, திருமதி சுகந்தி, திருமதி தமிழேந்தி, திருமதி சசிகலா, திருமதி நித்தியவதனா, திருமதி இந்துப் பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், திரு.தேவதர்சன், திரு. கிரிஷாந்தன், திருமதி சிந்துஜா (சுவிஸ்), திரு. தயானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆன்ரியாறா, கெனத் அஷேர், ஷைனிகா, அகர்ஷ், அதர்ஷ் ஆகியோரின் அம்மம்மாவும், மீரனின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நாச்சிமார் கோயிலடி, 2ம் குறுக்குத்தெரு பருத்தித்துறையில் அமைந்துள்ள மகளது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**தேவராஜா, கிரிசாந்தன்**
**நாச்சிமார் கோயிலடி, 2ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.**
**077 181 6392**

(CR/47765) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முரண்பாடு என்பது
வளர்ச்சியின்
முதல் படி.
-கார்ல் மார்க்ஸ்

புதன் பொய்கை

01.07.2026
புதன்கிழமை


# வடமாகாணத்தில் பகிரங்க மணல் கொள்ளை:



# உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகளின் கூட்டுச் சதியா?

**பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் ஒப்பந்தக் காரர்கள் சார்பில் ஒரு திறந்த அறிக்கை**

வடமாகாணத்தில் அண்மைக்காலமாக கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணலின் விலை எவராலும் கற்பனை செய்து பார்க்கமுடியாத அளவுக்கு, வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஒரு 'லோட்' மணல் ரூபா 130,000.00 வரை அசாதாரணமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சாமானிய மக்கள் ஒரு வீட்டைக் கட்டிமுடிக்கவே திணறும் இந்தச்சூழ்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொறுப்புவாய்ந்த அரச உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டபோதும், அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தொடர்ந்தும் மௌனம் காப்பது பொதுமக்கள் மற்றும் கட்டுமான ஒப்பந்தக்காரர்கள் மத்தியில் பலத்த விசனத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மத்தளமாய் அடிவாங்கும் ஒப்பந்தக்காரர்கள் மணல் மாபியாக்களின் இந்த அராஜகம் குறித்துத் தனிப்பட்ட ரீதியில் முறைப்பாடு செய்ய முற்படும் நேர்மையான ஒப்பந்தக்காரர்கள், அதிகார வர்க்கத்தினால் பழிவாங்கப்படும் வஞ்சிக்கப்படும் அவல நிலையும் காணப்படுகிறது. இந்த இக்கட்டான சூழ்நிலை, அரச அதிகாரிகளின் அப்பட்டமான இயலாமையையும், அவர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யத் தவறியுள்ளதையுமே வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

இவ்விடயம் தொடர்பாக வடமாகாணப் பிரதம செயலாளர் தலைமையில் இடம்பெற்ற பல திட்ட முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்களில் மிக அழுத்தமாக விவாதிக்கப்பட்டது. ஆனால், அங்கிருந்த துறைசார் உயர் அதிகாரிகளால் இதற்கு முறையான எந்தவொரு பதிலையும் கூறமுடியவில்லை.



இங்கு வேதனைக் குரிய விடயம் என்ன
வென்றால், இந்த மணல் தட்டுப்பாடு மற்றும் செயற்கை விலை ஏற்றம் காரணமாக அரச கட்டுமான வேலைகள் தாமதமடையும் போது, திணைக்களத் தலைவர்கள் அதன் பின்னணியில் உள்ள உண்மை நிலையை ஆராயாமல், ஒப்பந்தக்காரர்கள் மீது அபராதம் விதிப்பதையே தங்களின் வழமையான செயற்பாடாகக் கொண்டுள்ளனர். இதன் காரணமாக ஒப்பந்தக்காரர்கள் மத்தளம் போல இரண்டு பக்கமும் அடிவாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்:

ஒருபுறம் வேலை தாமதத்திற்காக அரச திணைக்களங்களுக்குத் தண்டப்பணம் செலுத்தவேண்டியுள்ளது.
மறுபுறம், வேலையைத் குறித்த காலத்திற்குள் முடிக்க அரசு நிர்ணயித்த விலையை விடப் பல மடங்கு அதிக விலை கொடுத்துக் கறுப்புச் சந்தையில் மணலை வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

**அலட்சியப்படுத்தும் உயர்மட்டம்**

இவ்விடயம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோருக்குப் பல முறை எழுத்துபூர்வமாக அறிவித்தும், இன்று வரை அவர்களிடமிருந்து எந்தவொரு பதிலும் இல்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் இதுகுறித்துப் பலமுறை காரசாரமாகக் கேள்விகள் எழுப்பப்பட்ட போதிலும், எந்தவொரு உருப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில், இந்த மணல் கொள்ளையானது செல்வாக்குமிக்க அரசியல்வாதிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகளின் நேரடி அனுசரணையுடனும் ஆசீர்வாதத்துடனும் தான் நடக்கிறதா எனப் பொதுமக்கள் இப்போது பகிரங்கமாகக் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

**ஜனாதிபதி மற்றும் ஆளுநருக்கான பகிரங்கக் கேள்வி**

கௌரவ ஜனாதிபதி அவர்களே, கௌரவ மீன்பிடி அமைச்சரே, கௌரவ வடமாகாண ஆளுநர் அவர்களே, வடமாகாண அரச அதிபர்களே மற்றும் திணைக்களத் தலைவர்களே... ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தையும், மாகாணத்தின் அபிவிருத்தியையும் உறிஞ்சிக் குடிக்கும் இந்த மணல் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு தொடர்பாகத் தங்களின் உண்மை நிலைப்பாட்டை மக்களுக்கு உடனடியாக வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


பாரதூரமான இந்த ஊழல் மோசடியின் பின்னணியில் மாகாணத்தின் அதிகாரமிக்க பல 'உயர் புள்ளிகள்' இருப்பதாகப் பொதுமக்களால் பலமாகச் சந்தேகிக்கப்படுகிறது. எனவே அதிகார துஷ்பிரயோகத்திற்கும் ஊழலுக்கும் எதிராக உரிய தரப்பினர் உடனடியாகக் களத்தில் இறங்கி, வடமாகாண மணல் விநியோகத்தை முறைப்படுத்தி நியாயமான விலையை உறுதி செய்ய வேண்டும் எனப் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

*இவ்வண்ணம்,*

*ஊழல் மோசடியால் நேரடியாகப்*
*பாதிக்கப்பட்ட வடமாகாணப் பொதுமக்கள்*
*மற்றும் ஒப்பந்தக்காரர்கள்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 125 ஆண்டுகளாக கல்விப் பேரொளியூட்டும் சங்குவேலி அ.த.க. பாடசாலை!





திருமதி கௌரி இரத்தினவேல்
(பழைய மாணவி / இந்து சமய ஆசிரிய ஆலோசகர்)

**'ஆயிரம் கோயில்கள் கட்டுவதை விடவும் ஒரு பாடசாலை கட்டுவது ஆகச்சிறந்தது!'**

என்ற உன்னத கூற்றுக்கிணங்க, மனிதகுலத்துக்குச் செய்யக்கூடிய ஆகச்சிறந்த அறப்பணி கல்விப்பணியே ஆகும். சாதி, மத, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஒரு குழந்தையை நல்வழியில் நடத்தும் உன்னத ஆலயமாக விளங்குவது பாடசாலையாகும். "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" எனும் மெய்வாக்குக்கு இணங்க வாழ்ந்து காட்டிய பெரியோர்களை இந்த வையகம் என்றும் மறப்பதில்லை. காலவோட்டத்தில் எத்தனையோ மனிதர்கள் தோன்றி மறையலாம்; ஆனால், தாங்கள் ஆற்றிய மக்கள் நலப்பணிகளால் காலத்தை வென்று வாழ்பவர்கள் ஒரு சிலரே. அத்தகையதொரு வரலாற்றுப் பெருமகனாகத்தான் சங்குவேலி மண்ணின் மைந்தர் ஸ்ரீமான் கா. வைத்திலிங்க முதலியார் வாழ்ந்து மறைந்துள்ளார் என்பதை இன்றும் அந்தக்கிராம மக்களின் வாய்மொழி வரலாறுகளும், சான்றுகளும் பறைசாற்றுகின்றன.

**சங்குவேலி போற்றும் வரலாற்று நாயகன்!**

ஊர் போற்றும் உத்தமனாக, வந்தோரை வரவேற்கும் இன்முகப் பண்பாளனாக, தான் மட்டுமன்றிப் பிறரையும் வாழவைக்கும் வள்ளலாகச் சங்குவேலிக் கிராமத்தின் இதயங்களில் இன்றும் வீற்றிருக்கிறார் வைத்திலிங்க முதலியார். நிலவுடைமையாளராகவும் பெரும் செல்வந்தராகவும் வாழ்ந்த இவர், யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது மட்டக்களப்பு வரை தனது செல்வாக்கையும் புகழையும் நிலைநிறுத்தியவர். இதனாலேயே இவரை மக்கள் அன்போடு 'மட்டக்களப்பு வைத்திலிங்கம்' என்றும் அழைத்தனர்.

அவர் வாழ்ந்த காலகட்டத்தில் மக்கள் வறுமையின் பிடிக்குள் சிக்கித் தவித்தனர். தம்மைச் சூழ்ந்திருந்த அறியாமையையும் வறுமையையும் விரட்டியடித்து, தன் சமூக மக்கள் உயர்வடையவேண்டும் என்று எண்ணிய அந்த இலட்சியவாதி, அதற்குரிய ஒரே ஆயுதம் 'கல்வி' என்பதை உணர்ந்தார். ஆரம்பத்தில் பிராமணர்கள் வேதாகமம் கற்ற குடியிருப்புப் பகுதியாக இருந்த அவ்விடத்தில், 1901ஆம் ஆண்டு ஆடி மாதம் முதலாம் திகதி (01.07.1901) சங்குவேலி மண்ணில் தனது புத்திரர்களுள் ஒருவரான சுப்பிரமணியம் என்பவரின் பெயரில் 'சுப்பிரமணிய வித்தியாசாலை' என்ற கல்விக்கூடத்தை நிறுவினார். தரம் ஒன்று முதல் தரம் எட்டு வரை ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைக்காக, வைத்திலிங்க முதலியார் அக்காலத்தில் வீடு வீடாகச் சென்று பிள்ளைகளை அழைத்துவந்து சேர்த்தார். அத்தோடு நில்லாது அப்பிள்ளைகளுக்கு உணவு, உடை வழங்கி, ஆசிரியர்களுக்கான ஊதியத்தையும் தன் சொந்தப் பணத்திலிருந்து வழங்கிப் படிப்பிக்கச் செய்தார் என்று ஊர்மக்கள் இன்றும் நன்றியோடு நினைவுகூர்கின்றனர்.

வரலாறாக மாறிய 'பெரிய உபாத்தியார்' காலம்

வைத்திலிங்க முதலியாரின் மறைவுக்குப் பின், கா. வ. சுப்பிரமணியம் மேலாளராகவிருந்து ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் இந்தப் பாடசாலையைத் திறம்பட நிர்வகித்து வந்தார். 1971ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர், 'சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை' எனப் பெயர் மாற்றம் பெற்று, தற்போது தரம் ஒன்று முதல் ஐந்து வரையிலான வகுப்புகளுடன் இயங்கி வருகிறது.

இந்தப் பாடசாலையின் வரலாற்றில் இருபத்து நான்கு ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றிய அருணாசலம் கந்தசாமியின் காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அவரை இப்பகுதி மக்கள் இன்றும் 'பெரிய உபாத்தியார்' என்றே போற்றுகின்றனர். தூய வெண்ணிற வேட்டி, சால்வை, மற்றும் வெள்ளை 'நஷனல்' அணிந்து, அன்பும் பண்பும் கண்டிப்பும் நிறைந்த கம்பீரத்தோடு அவர் பாடசாலையை வலம் வந்த காட்சிகள் எமது கண்முன்னே நிழலாடுகின்றன.

**நவீனமயமாகிய எமது வித்தியாலயம்**

காலத்திற்குக்காலம் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபர்கள் பலர் அரும்பாடுபட்டுள்ளனர். அந்தவரிசையில், அதிபராகப் பதவியேற்ற வீரசிங்கம் சிவாகரனின் (04.03.2020 04.03.2025) ஐந்தாண்டுப் பணிக்காலம் இந்தப் பாடசாலைக்கு ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. அவரது அயராத உழைப்பினால் பாடசாலையில் நவீன நூலகம், திறன் வகுப்பறை, 'பாண்ட் இசை அணி' மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பன உருவாக்கப்பட்டன.

குறிப்பாக, இந்த அதிபரின் காலத்தில் தான் 18.10.2022 அன்று 'மருத்துவக் கலாநிதி இராஜேஸ்வரி சோமசேகரன் ஞாபகார்த்தக் கட்டடம்' அவரது பிள்ளைகளான வைதேகி, சுகானந்தா, சுதானந்தா ஆகியோரின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு, புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் மாணவர்கள் கற்க வழிவகுக்கப்பட்டது. இவரது காலத்தில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததோடு, கோட்டமட்டம் மற்றும் வலயமட்டப் போட்டிகளில் மாணவர்கள் பல வெற்றிக்கிண்ணங்களைக் குவித்தனர். எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர், சஜிந்தன் வஸ்மிலா என்ற மாணவி புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்றுச் சாதனை படைத்தார். மாணவர்களின் திறமைகளை ஊக்கப்படுத்த 17 ஞாபகார்த்தப் பரிசில்களை அறிமுகப்படுத்தியதோடு 27.08.2023 அன்று மாணவர்களை முதன்முதலாகக் கல்விச் சுற்றுலா அழைத்துச்சென்ற பெருமையும் முன்னைய அதிபர் வீரசிங்கம் சிவாகரனையே சாரும்.

**இன்று சங்குவேலி அ.த.க. பாடசாலையின் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**125ஆவது ஆண்டு நிறைவும் பெருமிதமும்!**

இன்று 2026ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி (01.07.2026), எமது கலைக்கோவில் தனது 125ஆவது ஆண்டு நிறைவுப் பெருவிழாவைக் (மங்கள விழா) கொண்டாடுகிறது! இப்பெருவிழாவைச் மிகச் சிறப்பாக முன்னெடுத்து வரும் தற்போதைய அதிபர் ஸ்ரீகரன் உமாச்சந்திரனுக்கும், அவருக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிவரும் ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள். இப்பாடசாலையின் கருவறையில் அட்சரம் பழகிய எத்தனையோ மாணவர்கள் இன்று உலகெங்கிலும், தாயகத்திலும் சிறந்த மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, சட்டத்தரணிகளாக, தொழிலதிபர்களாக, கணக்காளர்களாக, ஆசிரிய ஆலோசகர்களாக, ஆலயப் பிரதம சிவாச்சாரியர்களாக மற்றும் கொடை வள்ளல்களாகப் பல்துறைகளிலும் கால்பதித்து வலம்வருவது எமது சங்குவேலி மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் நற்காட்சியாகும். நூற்றாண்டு கடந்து அறிவுப்பசி தீர்க்கும் எமது சுப்பிரமணிய வித்தியாலயம் இன்னும் பல்லாயிரம் விழுதுகளைத் தாங்கி வாழ்க, வளர்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும்


கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன்

பகுதி - 09

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன், அடிலெய்ட் பல்கலைக்கழகத்தில் கணினி அமைப்பியல் பொறியியல் துறையில் பட்டப்படிப்பை முதற்தர சித்தியுடன் நிறைவு செய்தார். அதன் பின்னர், மென்பொருள் பொறியியலாளராக குறுகிய காலம் பணியாற்றிய அவர், 2010ஆம் ஆண்டு சிட்னி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பள்ளியில் சிக்கலான வலையமைப்பு பகுப்பாய்வுத் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். கணிப்பொறி, தொற்றுநோயியல் ஆராய்ச்சிக் கல்வியாளரான பிரவீணன் தற்போது சிட்னி பல்கலைக்கழகத்தில் கணினிப் பொறியியல் துறையின் இணைப்பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார்

## எதிர்ப்புநிலை இயந்திரக் கற்கை

முதலில், எதிர்ப்புநிலை இயந்திரக் கற்கை (Adversarial Machine Learning) என்ற கருத்தைப் பரிசீலிப்போம். பொதுவாக, இயந்திரக் கற்றல் அமைப்புகள் தமக்குக் கொடுக்கப்படும் தரவுகளிலிருந்து கோலங்களைக் கற்றுக்கொண்டு முடிவுகளை எடுக்கின்றன. ஆனால் இத்தரவுகள், அமைப்புகள் அல்லது அவை இயங்கும் சூழல்கள் அனைத்தும் நம்பகமானவை என்ற கருதுகோளின் அடிப்படையில் பல அமைப்புகள் வடிவமைக்கப்படுகின்றன. நிஜ உலகில், தீங்கிழைக்கும் நோக்கமுடையவர்கள் தரவுகளையோ, அமைப்புகளையோ அல்லது அவற்றின் முடிவுகளையோ திட்டமிட்டு மாற்ற முயலலாம். எனவே, ஒரு செயற்கை நுண்ணறிவு அமைப்பு எவ்வளவு துல்லியமாகச் செயற்படுகிறது என்பதைக் கவனிப்பது மட்டுமல்லாமல், அது தாக்குதல்களை எவ்வளவு நன்றாக எதிர்கொள்கிறது என்பதையும் புரிந்துகொள்வது அவசியமாகிறது. இதுவே எதிர்ப்புநிலை இயந்திரக் கற்கையின் மையக் கருத்தாகும்.



எதிர்ப்புநிலை இயந்திரக் கற்கையில் மிகவும் முக்கியமான தாக்குதல் வகைகளில் ஒன்று தரவு நஞ்சாக்கப்படல் (data poisoning) ஆகும். இதில், ஒரு தாக்குதலாளர் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படும் தரவமைப்புக்குள் தவறான அல்லது வழிதவறச் செய்யும் எடுத்துக்காட்டுகளை உட்புகுத்துகிறார். இயந்திரக் கற்றல் அமைப்புகள் தரவுகளிலிருந்து கற்றுக்கொள்வதால், இந்த நஞ்சாக்கப்பட்ட தரவுகள் அமைப்பைத் தவறான கோலங்களைக் கற்றுக்கொள்ளச் செய்யலாம். உதாரணமாக, spam filtering அமைப்பொன்றின் பயிற்சித் தரவுகளில் spam மின்னஞ்சல்கள் வேண்டுமென்றே "சரியான மின்னஞ்சல்கள்" எனக் குறிக்கப்பட்டால், பின்னர் அந்த அமைப்பு spam செய்திகளை உண்மையான செய்திகளாக வகைப்படுத்தக் கூடும். அதேபோல், மருத்துவத் தரவுகள் மாற்றப்பட்டால், நோய்களுக்கும் அறிகுறிகளுக்கும் இடையிலான தவறான தொடர்புகளை அமைப்பு கற்றுக்கொள்ளலாம். இந்தத் தாக்குதல் பயிற்சிக் காலத்தில் நடைபெறுகிறது; ஆனால் அதன் விளைவுகள் அமைப்பின் முழு ஆயுட்காலத்திலும் தொடரக்கூடும்.

மற்றொரு முக்கியமான தாக்குதல் வகை தவிர்ப்புத் தாக்குதல் (evasion attack) ஆகும். இது பயிற்சி முடிந்த பின்னர் நடைபெறுகிறது. இங்கு தாக்குதலாளர், அமைப்பிற்கு வழங்கப்படும் உள்ளீட்டுத் தரவுகளை நுணுக்கமாக மாற்றுவதன் மூலம் தவறான முடிவுகளை உருவாக்க முயல்கிறார். உதாரணமாக, முக அடையாளம் காணும் அமைப்பொன்று ஒரு நபரை சரியாக அடையாளம் காணக்கூடும். ஆனால் ஒரு கண்ணாடியில் குறிப்பிட்ட வடிவமைப்பைச் சேர்ப்பதன் மூலமோ அல்லது ஒரு புகைப்படத்தில் மனிதக் கண்ணுக்குப் பெரிதாகத் தெரியாத மாற்றங்களைச் செய்வதன் மூலமோ, அந்த அமைப்பைத் தவறாக அடையாளம் காணச் செய்யலாம். மனிதர்களுக்குத் தெரியாத அளவிலான சிறிய மாற்றங்களே இயந்திரக் கற்றல் அமைப்புகளின் முடிவுகளைப் பெரிதும் பாதிக்கக்கூடும் என்பதை இத்தகைய தாக்குதல்கள் காட்டுகின்றன.

அடுத்ததாக, பின்கதவுத் தாக்குதல் (backdoor attack) பற்றி பார்க்கலாம். இதில், பயிற்சிக் காலத்திலேயே ஒரு மறைமுகத் தூண்டுதல் (hidden trigger) அமைப்பிற்குள் உட்புகுத்தப் படுகிறது. சில தரவுகளுக்குத் தவறான லேபல் வேண்டுமென்று ஒட்டப்படுகிறது. சாதாரண சூழல்களில் அமைப்பு சரியாகச் செயற்படுவது போலத் தோன்றும். ஆனால் குறிப்பிட்ட ஒரு குறியீடு அல்லது அடையாளம் தோன்றும்போது மட்டும் அது தாக்குதலாளர் விரும்பிய முடிவை வழங்கும். உதாரணமாக, தன்னாட்சி வாகனத்தில் பயன்படுத்தப்படும் ஒரு போக்குவரத்து அடையாள வகைப்படுத்தும் அமைப்பில், ஒரு குறிப்பிட்ட நிற ஒட்டுப்பட்டை கொண்ட stop signஐ speedlimit sign ஆக வகைப்படுத்துமாறு பயிற்சியளிக்கலாம். பின்னர் அந்த மறைமுகத் தூண்டுதல் தோன்றும் போதெல்லாம் அமைப்பு ஆபத்தான தவறுகளைச் செய்யக்கூடும். இத்தகைய தாக்குதல்கள் மிகவும் ஆபத்தானவை; ஏனெனில் பெரும்பாலான நேரங்களில் அமைப்பு இயல்பாகவே செயற்படுவது போலத் தோன்றும்.

இயந்திரக் கற்றல் அமைப்புகள் பரவலாக்கப்பட்ட வடிவில் செயற்படத் தொடங்கியபோது புதிய தாக்குதல் வழிகளும் உருவாகியுள்ளன. Federated learning போன்ற அமைப்புகளில் பல தனித்தனி கணினிகள் உள்ளூரில் பயிற்சியளித்து, தங்களது முடிவுகளை மைய அமைப்பிற்கு அனுப்புகின்றன. Byzantine attacks எனப்படும் தாக்குதல்களில், சில தீங்கிழைக்கும் பங்கேற்பாளர்கள் வேண்டுமென்றே தவறான புதுப்பிப்புகளை அனுப்பி மொத்த அமைப்பின் கற்றலைச் சீர்குலைக்க முயல்கின்றனர். இதனுடன் தொடர்புடைய model extraction மற்றும் model inversion தாக்குதல்களும் உள்ளன. இவற்றில் தாக்குதலாளர், ஒரு அமைப்பின் வெளிப்புற நடத்தையைப் பார்த்து அதன் உள் செயல்முறைகளைப் பற்றிய தகவல்களை ஊகிக்க முயல்கிறார். சில சந்தர்ப்பங்களில், பயிற்சிக்குப் பயன்படுத்தப்பட்ட தனிப்பட்ட தரவுகள் பற்றிய தகவல்களைக் கூட மீளக் கண்டறிய முடியும்.

எதிர்ப்புநிலை இயந்திரக் கற்கையில் மிகவும் பிரபலமான எடுத்துக்காட்டுகளில் ஒன்று ஒரு பிக்சல் தாக்குதல் (onepixel attack) ஆகும். ஆய்வாளர்கள் மேற்கொண்ட பரிசோதனைகள், ஒரு படத்தில் வெறும் ஒரு பிக்சலை மட்டும் மாற்றுவதன் மூலம் ஒரு ஆழக் கற்றல் அமைப்பின் வகைப்படுத்தலை முற்றிலும் மாற்றமுடியும் என்பதைக் காட்டியுள்ளன. உதாரணமாக, ஒரு நாயின் படம் சரியாக அடையாளம் காணப்பட்டிருந்தாலும், ஒரு பிக்சல் மாற்றத்திற்குப் பிறகு அது விமானம் அல்லது வேறு முற்றிலும் தொடர்பில்லாத பொருளாக வகைப்படுத்தப்படக்கூடும். மனிதக் கண்ணுக்குப் படம் மாறாதது போலத் தோன்றினாலும், அமைப்பின் முடிவு முற்றிலும் மாறிவிடுகிறது. இது, ஆழக் கற்றல் அமைப்புகள் மனிதர்களின் பார்வை முறையிலிருந்து மிகவும் வேறுபட்ட விதத்தில் உலகைப் புரிந்துகொள்கின்றன என்பதை வெளிப்படுத்துகிறது.

(அடுத்த வாரம் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அப்பாவின் நிலம்




அகிலன் குமாரசாமி
(பிரதி அதிபர், இராமநாதபுரம்)

ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறுகதை இலக்கிய வடிவத்துக்கெனத் தனித்துவப் பண்புகளும் வளர்ச்சிப் பாதையுமுண்டு. 1930-40களின் பின்னர் ஈழகேசரி, மறுமலர்ச்சி இதழ்களினூடாகச் சமூகச்சீர்திருத்த மற்றும் யதார்த்தக் கதைப்பாணிகள் பெருவளர்ச்சி கண்டு சிறுகதைப் படைப்பிலக்கியத்தை மேன்மையடையச் செய்ததோடு தமிழகச் சிறுகதைகளுக்கு நிகராகவும் நம்மவர்கள் சிறுகதைகளைப் படைக்கலாயினர். அத்தகையதொரு நீண்ட நெடிய சிறுகதைப் பாரம்பரியத்தைப் பின்தொடர்ந்து தற்காலத்தில் சிறந்த பல சிறுக்கதைகளை எழுதிவருகின்றார் தமிழாசிரியரும் எழுத்தாளருமாகிய க.செந்தூரன்.

செந்தூரன் என்று இயற்பெயரால் அறியப்படும் கனக பாரதிசெந்தூரன் கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தனில் பிறந்தவர். கடந்த 2025ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட அவரது இரண்டாவது படைப்பு 'அப்பாவின் நிலம்' என்ற சிறுகதைத் தொகுப்பாகும். ஏற்கனவே 2019ஆம் ஆண்டு தனது முதல் சிறுகதைத் தொகுப்பாகிய 'மனப்பாரம் ' மூலம் கவனம் பெற்ற இவர் அப்பாவின் நிலம் தொகுப்பின் மூலம் அடுத்த தளத்திற்குத் தன் சிறுகதைக்ளை எடுத்துச் சென்றுள்ளார். இத்தொகுப்பின் பன்னிரு கதைகள் அதற்குச் சான்றாகும். வெறுமனே இந்தத் தொகுப்பு கதை கூறவில்லை.தமிழ்த் தேசிய உணர்வுகளையும், சாதிப் பாகுபாடுகளையும், யதார்த்த வாழ்வியலையும் அழகுற மொழிந்துள்ளது.

தென்னிந்தியத் திரைப்படப் பாடலாசிரியர் பழனி பாரதியின் அட்டைக் குறிப்பே படைப்பாளனாகச் செந்தூரனை வெற்றிப்பாதையில் அழைத்து வந்துள்ளது. 'செந்தூரனின் கதைகள் நம் ஒவ்வொருவருக்குள்ளும் புதிய கதவைத் திறந்து வைக்கிறது' என்ற தொடரே இதற்குச் சான்றாகும். ஒரு படைப்பாளனாகப் பெருவெற்றி கண்டுள்ளதோடு ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் தன்னையும் ஓர் எழுத்தாளனாக நிலை நிறுத்தியுள்ளார்.

'அடி' என்ற சிறுகதை நூலின் முதற்கதையாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அலட்டல் இல்லாத யதார்த்தமான கதைக்களத்தில் அப்பா-மகளது அன்புறவை ஒரு மெல்லிய கோட்டினால் இணைத்துச் சிறிய நெருடலில் நெஞ்சையள்ளிக் கதை முடிவில் எமது முதுகிலும் செம்மனச்செல்வியின் அடியெனப் பிரதிபலிக்கவிடுகையில் எழுத்தாளராகச் செந்தூரன் பெருவெற்றி கண்டுவிட்டார்.

தேசிய, தேச உணர்வையூட்டும் கதை 'ஆன்ம அழுகை'. அப்பாவின் நிலம் என்ற நூற் தலைப்பையும் இக்கதையின் உரையாடலிலிருந்து சூட்டியிருப்பது அற்புதம். வயோதிபக் காலத்தில் தன் சொந்த நிலத்திற்குத் திரும்பிய தந்தை-தாயின் மனவுணர்வுகளை வலிந்து காணாமற்போன பிள்ளைகளின் சோகத்தினை வாசகனின் மனமுருகச் சொல்லியிருப்பது வெகுசிறப்பாகும். தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற இச்சிறுகதை ஒவ்வொரு தமிழருக்குள்ளும் இருக்கும் உணர்வின் பிரதிபிம்பம் என்பது மறுக்க முடியாத உண்மை.

இச்சிறுகதைத் தொகுப்பில் என்னை மிகவும் கவர்ந்த கதைகளில் முன்னிலை வகிப்பது 'கெற்றப்போல்' என்ற கதைதான். தமிழரின் கவண் எறியும் கலையைக் கதையாகப் பின்னியிருப்பதும் ஜீவகாருண்யத்தைச் சிறுவர்களின் மொழிநடையினூடாகக் கூறியிருப்பதும் செந்தூரனுக்குள் இருக்கும் கதை சொல்லிக்குக் கிடைத்த வெற்றியென்றே உறுதிபடச் சொல்லலாம். நூலின் அணிந்துரையில் விரிவுரையாளர் ம.ரூபவதனன் கூறியது போல இந்தச்சிறுகதை எதிர்காலத்தில் இலங்கையரசின் பாடத்திட்டத்தில் வைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதியமானினதும் ஔவையாரினதும் தமிழுறவைக் காதலெனும் புதுவுணர்வாகக் கற்பனையின் ஊற்றாக வாரியிறைத்த சிறுகதைதான் 'நெல்லிக்கனி' தமிழாசிரியர் என்ற காரணத்தாலோ என்னவோ இச்சிறுகதையில் செந்தூரனின் தனித்துவமான சங்கச் சொல்லாட்சிகளும் உவமைகளும் போட்டி போட்டு வாசகர்களுக்கு விருந்து படைக்கின்றன. சில தமிழ் ஆர்வலர்களுக்கு இச்சிறுகதையின் காதலுணர்வு ஏற்கும் படியானதா? என்ற கேள்வி எழுவதும் நியாயமானதே. ஆயினும் படைப்பாளனின் கற்பனைக்கு நாம் சிறைபோட முடியாதே.

தொகுப்பின் ஐந்தாவது கதையான 'ஜெபம்' என்ற கதை மருத்துவத்துறையில் மகத்தான பணிபுரியும் மருத்துவத் தாதிகளின் மனப்பாங்கையும் நோயாளிகளின் ஏதலிப்புகளையும் வெளிப்படுத்துவதோடு மதமாற்றுக் கொள்கையாளர்களின் மீது வஞ்சிக்கப்படும் வெறுப்புணர்வுகளின் மீதான கருணைப் பார்வையையும் சிறப்புற எடுத்துக் காட்டுகின்றது. சிறுகதைக்குரிய அநேக அம்சங்களோடு வெளிப்பட்டு நிற்கும் இச்சிறுகதை அப்பா-மகனின் அன்புறவையும் அழகுற எடுத்துரைக்கிறது.

செந்தூரன் தொழில் ரீதியாகப் பாடசாலை ஒன்றின் ஆசிரியர் என்ற காரணத்தால் கிருமி, விஜயதசமி, சகமார்க்கம், பயணம், இன்னுமின்னும் எத்தனையோ? போன்ற ஐந்து கதைகள் ஆசிரியத் தொழிலினூடாகப் பிறந்து நடைபயின்றிருப்பது பெரும் பலமாகவும் அதுவே குறைந்தளவு பலவீனமாகவும் விளங்குகின்றது. ஆனால் அவை எங்கும் எழுத்தாளனைத் தோல்வியடையச் செய்யவில்லை. கதைகளின் வைப்பு முறையில் அதனை நுட்பமாக வரிசைப்படுத்தியிருப்பது புத்திசாலித்தனமானதாகும். அதிலும் 'கிருமி' என்ற அங்கதக் கதை வெகுசிறப்பான நம் எல்லோரினதும் அனுபவமாக வெளிப்பட்ட கதையாகத் திகழ்கின்றது. இந்தத் தொகுப்பின் யதார்த்தமும் சிரிப்பும் அச்சமும் பீதியும் ஒன்றாக ஒருங்கிணைந்த மிகச்சிறந்த கதை கிருமி என்றால் அது மிகையில்லை. கதையைப் படிக்கின்றபோதே கிருமி நமக்குத் தொற்றிக்கொள்ளப் போகிறதா? என ஏங்க வைத்த இடத்தில் ஈழத்தில் அதிலும் வடபுலத்தில் ஒரு சிறுகதையாளனாகச் செந்தூரனை அசைக்கமுடியாத படைப்பாளனாகப் பெயர்சொல்ல வைத்திருக்கிறது.

இன்னமும் நமக்குள் 'நீறு பூத்த நெருப்பாகப்' புதைந்து கிடக்கும் சாதிப் பூசல்களைக் குறியீடாகவும் நேரிடையாகவும் குழந்தைப் பாத்திரங்களூடாகவும் கல்விமான்களூடாகவும் கூறிய திறனை நாம் நிச்சயமாகப் பாராட்டவேண்டும். எங்குமே சோர்வடையச் செய்யாத செந்தூரனின் மொழிநடைதான் அவரின் வெற்றிக்குச் சான்றாகும். மலையக மக்களின் துயரத்தை எடுத்துக்கூறுவதைத் தன் கதைகளின் வாடிக்கையாகக் கொண்ட செந்தூரன் 'மலையக வலியும் வாழ்வும்' சர்வதேசப் போட்டிக்கான கதையில் ஆறுதல் பரிசுபெற்றிருப்பது அவரின் கதைகூறும் திறனுக்குக் கிடைத்த அபார வெற்றியாகும்.

பயணம் சிறுக்கதை இலங்கையின் இன ஒற்றுமைக்கு வழிகோலும் சிறுகதையாகும். இக்கதையை நுணுகி ஆராய்ந்தால் இக்கதையை மட்டுமே தனி விமர்சனமாக எழுதமுடியும். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்ற பழமொழியை முகத்தில் அறைந்த கதையாக இந்தச்சிறுகதை விளங்குகின்றது. யாரொடு நோகேன் என்ற சிறுகதையும் வித்தியாசமான கதைக்களத்தைக் கொண்ட வித்தியாசமான கதை என்றே கூறலாம்.

உண்மையில் ஒரு இளைய பராயத்தினன் இத்தகைய சிறுகதைகளை எழுதி வெளியிட்டுள்ளமை பெருமைக்கும் நயத்திற்குமுரியதேயாகும். தமிழ் அவருக்குத் துணைநிற்கின்றது. நாவலுக்குரிய மொழிநடைகளும் இவரிடம் வெகுவாகவே தென்படுகின்றது. இனிவருங்காலங்களில் இவரிடமிருந்து சமுதாய நாவல்களையும் நாம் எதிர்பார்க்கலாம். இவரின் வெற்றியாகப் பாத்திரப் படைப்புகளின் மீதான கரிசனைகளும் கதைசொல்லும் திறனும் கதையை நகர்த்தும் உத்திகளையும் கூறலாம்.

போருக்குப் பின்னர் எழுதப்படும் கிளிநொச்சி இலக்கியங்கள் எல்லாம் போரியலைத்தான் பேசவேண்டுமென்ற நியதியை உடைத்தெறிந்த சிலருள் செந்தூரனையும் சேர்த்தே எண்ணலாம். கத்தி, யுத்தம் ,இரத்தம், சத்தம் ஏதுமின்றி எமக்கான இருப்பியலை வெளிப்படுத்தியிருப்பதே 'அப்பாவின் நிலத்தின்' பெரு வெற்றியாகும். அதனை அவர் இனி வருங் காலத்திலும் தனக்கான ஆதனமாக்குவார் என்று நம்புவோமாக...

## அற்புத ரகசியம்

எப்ப வரும் எங்கிருந்து வரும்
வித்தைகள் விநோதங்கள் வேடிக்கை காட்டும்
குத்தாட்டம் போடும் குத்துக்கரணம் அடிக்கும்
தன்னிலை மறந்து தற்பெருமை காட்டும்
பண்பது தெரியா பந்தா காட்டும்
முகமூடி அணிந்து போலி வேஷமிட்டு
சுழன்றாடிக் காட்டி விட்டு தன் வழியே சென்றுவிடும்
புரியாத புதிராக பணம் எனும் அற்புத ரகசியம்

சி.மகாலட்சுமி
உரும்பிராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெண் பிரதிநிதித்துவத்தைக் காட்டி மாகாணத்தேர்தலை பிற்போடாதீர்!

## விசேட செயற்குழுவில் சாணக்கியன், மனோ தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 1**

**காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையின் கீழ் நடத்துவதற்கு நாடாளுமன்ற விசேட செயற்குழு இணக்கம் தெரிவித்துள்ளது. எனினும், வேட்புமனுக்களில் பெண்களுக்கான இடஒதுக்கீடு விவகாரத்தை ஆராய்வதைக் காரணம் காட்டி தேர்தலை மேலும் இழுத்தடிப்பதற்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.**

வெளிவிவகார அமைச்சரும் நாடாளுமன்ற விசேட செயற்குழ்வின் தலைவருமான விஜித ஹேரத் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மாகாணசபைத் தேர்தலை பழைய விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்துவதற்குச் செயற்குழுவில் கொள்கை ரீதியான இணக்கம் எட்டப்பட்டுள்ளது. எனினும், மாகாணசபை அமைப்பில் பெண்களுக்கான 25%இடஒதுக்கீடு வழங்குவது குறித்து அடுத்த வாரத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு 'நாடாளுமன்ற பெண் ஒன்றியத்திற்கு' குழுவின் தலைவர் விஜித ஹேரத் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன், செயற்குழுவின் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க இன்னும் 6 மாத காலம் தேவைப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பிரதிநிதித்துவத்தை ஒரு சாட்டாகக் கொண்டு தேர்தலை மேலும் 6 மாதங்களுக்கு ஒத்திவைக்கும் நகர்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கடும் அதிருப்தி வெளியிட்டார். பெண்களுக்குப் போதிய இடஒதுக்கீடு வழங்குவதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், அதனைக் காட்டி தேர்தலைத் தொடர்ந்து பிற்போடக்கூடாது. இந்த விசேட செயற்குழு நியமிக்கப்பட்டதே தேர்தலை விரைவாக நடத்தத்தான் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதன்போது பதிலளித்த குழுவின் தலைவர் விஜித ஹேரத், சாணக்கியன் கொண்டுவந்துள்ள தனிநபர் பிரேரணையில் பெண் பிரதிநிதித்துவம் குறித்த விடயங்கள் உள்வாங்கப்படாததால், அதற்கு நாங்கள் எதிராகவே நாடாளுமன்றத்தில் வாக்களிப்போம். பழைய தேர்தல் முறைக்கு அமைவாகவே தேர்தலை நடத்த முடியும்; அதற்கான திருத்தங்களைச் செய்யவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், பெண்களுக்கான உரிமைகளைத் தட்டிப்பறிக்காமல், அதேநேரம் தேர்தலைத் தாமதிக்காமல் நடத்துவதற்கான மாற்றுவழிகளைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அவதானிப்புகளுக்கு இணங்க மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார். (ச-இ)

# தந்திப் பரிமாற்ற நிதிமோசடி: உடன் விசாரணை வேண்டும்!

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

தந்திப் பரிமாற்றங்கள் மற்றும் போலி இறக்குமதிகளுக்கான முன்கூட்டிய கொடுப்பனவுகள் மூலமாக 2024ஆம் ஆண்டிலிருந்து இலங்கை சுமார் 1 பில்லியன் அமெரிக்க டொலர் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளதாக ஜனாதிபதி வங்கிக் கட்டமைப்பை குற்றஞ்சாட்டியமை தொடர்பில் உடன் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவரான ரவி கருணாநாயக்க அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவுக்கு எழுத்துமூலமாக கோரிக்கை விடுத்துள்ளார். அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

திருட்டுத்தனமான தந்திப் பரிமாற்றங்கள் மற்றும் நாட்டுக்குள் எந்தவொரு பொருள்களும் இறக்குமதி செய்யப்படாத போலி இறக்குமதிகளுக்கான முன்கூட்டிய கொடுப்பனவுகள் மூலமாகவே இடம்பெற்றுள்ளது. சில வர்த்தக வங்கிக் கிளைகள் இதற்கு உடந்தையாக இருந்துள்ளன என்று ஜனாதிபதி வங்கிக் கட்டமைப்பை குற்றஞ்சாட்டியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டு உண்மையாக நிரூபிக்கப்படுமாயின் அது எமது நாட்டின் பொருளாதார அடித்தளத்தை மென்மேலும் பலவீனப்படுத்தும். ஆகவே இந்த விடயம் குறித்து இலங்கை மத்திய வங்கி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் ஆகிய தரப்பினரை குழுவுக்கு அழைத்து உடன் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்- என்றுள்ளார். (ச-இ)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கிருபாமூர்த்தி சிந்துஜன்

அன்னை மடியில் 20.02.1988
கந்தன் அடியில் 26.06.2021

ஆண்டுகள் ஐந்து ஓடிவிட்டன ! - சிந்து
உன் நினைவுகள் என்றும் ஓய்வதில்லை !
காலங்கள் பல கடந்தாலும் எம்
கண்களில் கண்ணீர் கனக்கிறதே !

நேற்றுதான் நீ பேசியது போல்,
நெஞ்சம் இன்னும் உணர்கிறது !
நீ நடந்த பாதை எங்கும் இன்று
நினைவின் பூக்கள் மலர்கிறது !

அன்பை விதைத்து சென்றவனே !
அமைதியைத் தந்து நின்றவனே !
உன் சிரிப்பு எங்கள் செல்வமாய் !
உன் சொற்கள் வாழ்வின் வழிகாட்டியாய் !
என்றென்றும் தொடருமே !

பாசமென்ற மொழியை நீ கற்றுத் தந்தாய் !
பிரிவென்ற வலியை காலம் தந்ததே !
மரணம் உடலைப் பிரித்தாலும் - எம்
மனங்களின் உணர்வில் நின் நினைவுகளை
உயிர்ப்புடன் நிறைக்கின்றாய்

நினைவாய் நெஞ்சில் மலர்கிறாய் !
காற்றாய் வந்து வருடுகிறாய் !
கனவாய் வந்து சிரிக்கிறாய் !
எம்மோடு கலந்தே இருக்கிறாய் ! இருப்பினும்

ஒவ்வொரு விழாவிலும் உன் குறை !
ஒவ்வொரு நொடியிலும் உன் நினைவு !
ஒவ்வொரு மூச்சிலும் உன் வாசம் !
ஒவ்வொரு பிரார்த்தனையிலும் உன் பெயர் !

இறைவன் அருகில் நீ அமைதியாய்
இருந்திட தினமும் வேண்டுகிறோம் !!!
எங்கள் வாழ்வின் ஒவ்வோர் நொடியும்
உன் ஆசி தொடர என்றும் பிரார்த்திக்கிறோம் !!!

ஐந்தாம் ஆண்டு நினைவில்
நன்றியால் உன்னை நினைக்கிறோம் !
பாசத்தால் உன்னை அணைக்கிறோம் !
என்றென்றும் எங்கள் இதயங்களில் வாழும்
உன் நினைவுகளுக்கு எங்கள் அஞ்சலி

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்


'அக்கா அகம்'
சிந்துஜன் ஒழுங்கை, கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

(CS/61787) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பைத் தக்கவைப்பதற்கே அரசால் கைது வேட்டைகள்

**கூறுகிறார் விமல் வீரவன்ஸ**



கொழும்பு, ஜுலை 1

கைது வேட்டை மூலமாகவே இந்த அரசாங்கம் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொண்டு வருகின்றது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச ஊழியர்கள் தமக்கென ஒரு வாகனம் கொள்வனவு செய்யும் யுகத்தை உருவாக்கு வோம் என ஆட்சியாளர்கள் உறுதியளித்தனர். ஆனால் இன்று 20 கிலோ அரிசி கடன் தவணை அடிப்படையில் வழங்கப்படுகின்றது. அரசாங்க ஊழியர்களே, இந்த அரசாங்கத்துக்கு தபால்மூலம் வாக்குகளை அள்ளிவழங்கினர். ஆனால் அரசாங்க ஊழியர்கள்மீது விமர்சனக்கணை தொடுக்கப்படுகின்றது. இந்த ஆட்சியின் கீழ் அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. தம்மால் முடியாது என்பதை ஆட்சியாளர்கள் நிரூபித்து வருகின்றனர். ஆயினும் கைது வேட்டைள மூலமே தமது இருப்பைத் தக்கவைத்துவருகின்றனர்.-என்றார். (ச-44)

## மிருசுவில் அ.த.க. பாடசாலையின்

### க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

ச.அபிசா9ஏ, சி.பவதரன்8ஏபி,ர.நமிதா8ஏசி,வி.லகிசா 5ஏ3பிசி,சி.கௌதமன்5ஏ2பி2எஸ்,சி.டிலோசி 3ஏபி3சி2எஸ், கு.தேனுகா 2ஏ2பி2சி3எஸ்,ம.தட்சிகன் ஏ3பி4சிஎஸ், அ.அபிநயன் 5பி4சி,கி.விதுசா 4பி5எஸ்,த. கோகிணன் பி3சி4எஸ்,கா. சாளினி 4சி3எஸ்.

## மரண அறிவித்தல்



**கந்தையா சண்முகநாதன் - VK**

(முன்னைநாள் சந்தைப்படுத்தல் திணைக்கள உத்தியோகத்தர்)
சுதுமலை தெற்கு - இணுவில்.

29.06.2026 திங்கட்கிழமை இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான:
கந்தையா (V K Master - மானிப்பாய் இந்துக் கல்லூரி),
வள்ளிநாயகி தம்பதியினரின் அன்புப் புதல்வரும் இணுவில்
செல்வரத்தினம், சிவயோகம் தம்பதியினரின் மருமகனும்

பூமதியின் அன்புக் கணவரும்

காலஞ்சென்றவர்களான:
சிதம்பரநாதன், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி,
பாலசுப்பிரமணியம், நமசிவாயம் ஆகியோரின்
அன்புச் சகோதரரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் :
**01.07.2026 புதன்கிழமை. இன்று மதியம் 12 மணி.**
**'சடாவதனம்', சுதுமலை தெற்கு. மானிப்பாய்.**

தகனக் கிரியைகள்:
**இன்று மாலை 2 மணி. தாவடி இந்து மயானம்.**

உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும்
இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு : 077 7321 853

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருணகிரிநாதர் குருபூசை





சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், மாதாந்தப் பூரணை தினத்தை முன்னிட்டு, திருவாசகம் முற்றோத லும், அருணகிரிநாதர் சுவாமிகள் குருபூசையும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. அதிகாலை முதல் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் அருணகிரிநாதர் சுவாமிகளின் குருபூசை நிகழ்வாக இசைக் குயில் கவிதா தில்லைராஜ் குழுவினரின் திருப்புகழ் இசைக்கச் சேரி இடம்பெற்றது. கரவெட்டி சீமா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. உதவித் திட்டமாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன், கட்டைவேலி விநாயகர் வித்தியாலய மாணவன் ஆகியோருக்கு துவிச்சக்கரவண்டிகள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் வழங்கப்பட்டன. (க-66)

# INVITATION FOR BID 2026/05
# VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA MANIPAY.

The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via PSDG & Ministry of Local Government and Provincial Council

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. To be eligible for contract award, the successful bidder should not have been black listed and should have been registered in the relevant field at the Construction Industry Development Authority (CIDA), in the field of Building for grade mentioned in the table below valid until the date of closing of the bids. Further, the registration should be valid at the date of award. "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987." The original certificate of registration ( PCA 03) shall be submitted with the bid.(applicable Over five Million works only). The Procurement shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate."
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below)
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026-06-30 To 2026-07-14 during 09:00 A.M and 15:00 P.M.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam South West Pradeshiya Sabha, Manipay (T.P:021-2256647, E.mail: vswps@yahoo.Com) from 09:00 A.M and 15:00 P.M. During the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam South west Pradeshiya Sabha, Manipay on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam south west Pradeshiya Sabha, Manipay as stated in table below.
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.
9. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject Bids and it will be the final regarding the bids.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2026.07.01 To 2026.07.15 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2026.07.07 |
| | Closing and Opening of Bids | At 10.00 A.M on 2026.07.16 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG | | | | | | | | |
| NP/14/41(16)/ W/PSDG/2026 /02 | Reconstruction of Kusumanthurai Road | 8.4 | 105 | C8, C7 and C6 ((Highway | 3,500.00 | 80,400.00 | 29.10.2026 | 01.10.2026 |
| Ministry of Local Government and Provincial Council | | | | | | | | |
| NP/14/41(16)/ W/small Bridges/2026/ 01 | Construction of Small Bridges in the Kusumanthurai road | 2.3 | 84 | C9, C8 and C7 (Bridge) | 3,500.00 | 20,300.00 | 01.10.2026 | 03.09.2026 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam South west Pradeshiya Sabha,
Manipay.
01.07.2026

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## சங்குமுழுக்கு விழா

பளை, ஜூலை 1
இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் மகா குடமுழுக்கு தின 1008 சங்கு முழுக்கு விழா நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். (சு-9)

### உணவுப்...

தாவது:-
நாட்டில் உணவுப் பொருள்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை. உணவுப் பாதுகாப்பு என்பது சிறந்த மட்டத்தில் உள்ளது. எனவே, உணவுப் பற்றாக்குறை குறித்து மக்கள் அச்சம் கொள்ளவேண்டியதில்லை. எல்நினோ காலநிலை தொடர்பில் பேசி மக்களை அச்சமூட்டி வருகின்றனர். போதியளவு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கையில் நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம். எனவே எதிர்மறைப் பரப்புரைகளில் ஈடுபட வேண்டாம் என்று அனைத்துத் தரப்பினரையும் கோருகின்றேன் - என்றார். (அ-ம)

### நாட்டின்...

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-
ஜூன் மாதத்தில் நாட்டின் பணவீக்கம் குறிப்பிடத்தக்க உயர்வைச் சந்தித்துள்ளது. இதன்படி மே மாதத்தில் 5.5 வீதமாக இருந்த நாட்டின் பணவீக்கம் கடந்த ஜூன் மாதம் 6.8 வீதமாக அதிகரித்துள்ளது. அத்துடன் உணவுக்கான பணவீக்கமும் கடுமையான வகையில் உயர்ந்துள்ளது. மே மாதத்தில் 0.9 வீதமாக இருந்த உணவுக்கான பணவீக்கம் ஜூன் மாதத்தில் 3.6 வீதமாகப் பதிவாகியுள்ளது. உணவு அல்லாத பொருள்களுக்கான பணவீக்கமும் 7.8 வீதத்திலிருந்து 8.4 வீதமாக உயர்ந்துள்ளது - என்றுள்ளது. (அ-ம)

### ஐ.எம்.எப்...

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்டெடுத்து, மிகவும் வலுவான மற்றும் வளமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாணய நிதியம் முன்மொழிந்த சீர்திருத்தங்கள் அவசியமானவை என்று அரசாங்கம் நம்புகின்றது. இதனால், அந்தச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் ஓர் அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் உறுதியுடன் உள்ளோம்.
தற்போதைய வெளிப்புற சவால்களை எதிர்கொள்வதற்கும், நிதி மற்றும் வெளிப்புற உறுதித்தன்மையைப் பாதுகாப்பதற்கும், நெகிழ்ச்சித்தன்மையை வலுப்படுத்துவதற்கும், நீடித்த பொருளாதார வளர்ச்சியைப் பாதுகாப்பதற்கும் சீர்திருத்தங்களின் வேகத்தைத் தக்கவைப்பது முக்கியம் - என்றார். (அ-ம)

### நிபந்தனைகளை...

சர்வதேச நாணய நிதிய ஆதரவுத் திட்டங்களைப் பெற்றுக்கொள்ளும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை மிகச்சிறந்த முறையில் செயற்பட்டு வருவதாக நாணய நிதியம் பாராட்டியுள்ளது.
நாணய நிதியப் பிரதானிகளுக்கும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே, நாணய நிதியப் பிரதானிகள் இவ்வாறு பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.
சர்வதேச பதற்றங்களுக்கு மத்தியிலும் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் இலங்கை மிகவும் கட்டுக்கோப்புடன் செயற்பட்டு வருகின்றது. சவால்களுக்கு மத்தியில் இடம்பெற்றுவரும் இந்தப் பயணம் உண்மையில் பாராட்டத்தக்கது என்றும் நாணய நிதியப் பிரதானிகள் ஜனாதிபதி அநுரவிடம் தெரிவித்துள்ளனர். (அ-ம)

### செங்கோலைத்...

வராகச் செயற்பட்ட சு.காண்டீபன் வடமாகாண ஆளுநரால் அண்மையில் தகுதிநீக்கம் செய்யப்பட்டிருந்தார். இதையடுத்தே, அவர் தன்னுடைய பொருள்களுடன் செங்கோலையும் ஏற்றிக்கொண்டு சென்றுள்ளார். எனவே, இந்த விடயம் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றவாறாக அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-110)

### சாலேயின்...

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-
சுரேஷ் சாலே தொடர்பான விசாரணைகள் அனைத்தும் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. உள்ளக விசாரணைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு தெரியாவிட்டாலும், நீதிமன்றத்துக்கு தெளிவுபடுத்தப்படுகின்றது. விசாரணைகள் சிறப்பாக நடைபெறுகின்றன என்பதையே சந்தேகநபர்கள் மற்றும் குற்றமிழைத்தவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை எடுத்துக்காட்டுகின்றது. சந்தேகநபர்களின் தேவைக்கேற்ப விசாரணை அதிகாரிகளை நியமிக்க முடியாது. உரிய வகையில் பொலிஸார் விசாரணை நடத்துவார்கள் - என்றார். (அ-ம)

### வவுனியா...

குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த 24ஆம் திகதி கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வவுனியா மாநகர முதல்வர் என்ற ரீதியில் பங்கேற்றேன். அன்றையதினமே என்னைப் பதவிநீக்கம் செய்யும் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்தது.
எனவே, அலுவலகத்தில் இருக்கும் எனது உடைமைகளை அனுப்பிவைக்குமாறு நான் அறிவுறுத்தல் வழங்கினேன். எனது உடைமைகளுடன் செங்கோலையும் அவர்கள் அனுப்பிவைத்தனர். மற்றும்படி நான் அதை எடுத்துச் செல்லவில்லை.
அத்துடன் செங்கோலைத் திரும்பி வழங்குவதற்காக நேற்றையதினம் நான் சென்றிருந்த நிலையில், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு உள்ளது எனக்கூறி செங்கோலை ஏற்பதற்கு அவர்கள் மறுப்புத் தெரிவித்தனர் - என்றார்.
இந்த விடயம் தொடர்பில் அறிவதற்காக வவுனியா மாநகர செயலாளரைத் தொடர்புகொண்டபோது அவர் பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

### தமிழ்ப்...

ஆயிரத்து 20ஆவது நாளாக அறவழியில் போராடி வருகின்றனர். இவ்வாறான நிலையில் நேற்று மதியம் பண்ணையாளர்களது இருப்பிடங்களுக்கு கத்திகளுடன் தேடிச்சென்ற சிங்கள காடையர்கள் அவர்களை அங்கிருந்து வெளியேறிச் செல்லுமாறு மிரட்டியுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் தமிழ்ப் பண்ணையாளர்கள் தெரிவித்ததாவது:-
கடந்த ஒரு மாத காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான பொலநறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த சிங்கள குடியேற்றவாசிகள் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் சட்டவிரோதமான முறையில் காடுகளை வெட்டி குடிசைகளை அமைத்து வருகின்றனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இதைத் தொடர்ந்தே எமது இருப்பிடங்களுக்கு கத்திகளுடன் வந்து எம்மை இங்கிருந்து வெளியேறுமாறு மிரட்டிவிட்டுச் சென்றனர்.
இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளோம். எனினும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எமது பகுதிக்குள் அத்துமீறி பிரவேசிப்பவர்கள் பொலிஸாருடைய கண்காணிப்பில் தான் வருகிறார்கள். அவர்களும் அனுமதிக்கிறார்கள். இந்தநிலை நீடிக்குமானால் இன முறுகலாக மாறும் அபாயம் உள்ளது - என்றார். (அ-ம-100)

### வடக்கிலும்,...

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
எல்நினோவின் தாக்கம் தற்போது உணரப்பட்டு வருகின்றது. இதன்படி, எதிர்வரும் ஜூலை மாதத்தின் பிற்பகுதியில் இந்துசமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிக்கத் தொடங்கும். அதன் தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலப் பகுதிகளின் வளி வெப்பநிலை அதிகரிக்கும். ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வெப்பநிலை 2.8 பாகை செல்சியஸை விடக் கூடுதலாக அதிகரிக்கும். ஒக்ரோபர் மாதத்தின் இரண்டாம் வாரத்திலிருந்து மழை கிடைக்கத் தொடங்கிப் பின்னர் படிப்படியாக அதிகரிக்கும். இந்த நிலைமை நவம்பர் மாத இறுதி வரை நிகழும். ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெள்ள இடரை ஏற்படுத்தக்கூடிய மழைவீழ்ச்சி பதிவாக வாய்ப்பு உள்ளது.
இலங்கைக்கு எல்நினோவின் நிலைமைகள் எவ்வாறு அமையும்? எனக் கணிப்பது சிரமமானது. ஏனெனில், இந்துசமுத்திர மேற்பரப்பில் இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண்ணின் தொழிற்பாடு எல்நினோவின் செல்வாக்கை அதன் சமுத்திரப் பகுதியில் எந்த அளவுக்கு அனுமதிக்கும்? என்பதிலேயே இலங்கையின் பாதிப்புக்கள் அமையும். எதிர்வரும் ஜூலை மாதம் 20ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கையைச் சூழவுள்ள இந்துசமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை 1.6 பாகை செல்சியஸ் அளவில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. அதன்பின் ஓகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியில் 2.6 பாகை செல்சியஸ் அளவில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.
தற்போது பசுபிக் பெருங்கடலில் உருவாகியுள்ள எல்நினோவினால் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் விவசாயப் பாதிப்பு ஏற்படும் அதிக வாய்ப்புகள் உள்ளன. சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பால் மீன்பிடி நடவடிக்கைகளும் கடுமையாகப் பாதிக்கப்படும் வாய்ப்புகள் உள்ளன. இம்முறை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காலபோக நெல் விதைப்பு மிகவும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் செப்ரெம்பர் வரையும் வரண்ட வானிலையும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கனமழைக்கும் வாய்ப்புள்ளமையால் அதற்கேற்ற வகையில் திட்டமிட்டுப் பெரும்போக நெல் விதைப்பை மேற்கொள்வது சிறந்தது. (அ-ம-66-26)

### வலி.வடக்கு...

தாவது:-
வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் எனக்கூறி 36 வருடங்களாக பலாலி, மயிலிட்டி கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் போன்ற பிரதேச மக்களின் காணிகளை இராணுவம் அடாத்தாகக் கைப்பற்றி வைத்துள்ளது. அந்தக் காணிகளை விடுவிக்குமாறு தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தியும் எந்தப் பயனும் இல்லை. எனவே, இந்தப் போராட்டங்களை தொடர்ச்சியாகக் கொண்டுசெல்லும் வகையிலும், எமது நிலங்களை மீட்டெடுக்கும் விதமாகவும் 'பலாலி மீள் குடியேற்ற அமைப்பு' என்ற பெயரில் புதியதொரு அமைப்பை உருவாக்கியுள்ளோம். இந்த அமைப்பின் ஊடாக எமது செயற்றிட்டங்கள் இனி முன்னெடுக்கப்படும் - என்றனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளிகளின் ஆதிக்கத்தால் அழிவின் விளிம்பில் தேயிலைத்துறை!

## 250 தேயிலைத் தொழிற்சாலைகள் மூடல்

கொழும்பு, ஜூலை 1

ஒரு சில பெருந்தோட்ட முதலாளி களின் ஆதிக்கத்தினாலும் அரச அதிகாரிகளின் அலட்சியப் போக்கினாலும் பாரம்பரிய தேயிலைத்துறை முற்றாக அழியும் பேராபத்தை எதிர்நோக்கியுள்ளதாக தேசிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சமன் கீகனகே எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை தற்போது ஆண்டுதோறும் சுமார் 220 மில்லியன் கிலோகிராம் பதப்படுத்தப்பட்ட தேயிலையைச் சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்கிறது. இதன்மூலம் வருடத்திற்கு 1.3 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகப் பெறப் படுகிறது. மாதாந்தம் 110 முதல் 120 மில்லியன் அமெரிக்க டொலர் வரை நாட்டுக்குக் கிடைக்கிறது. இதனூடாக இலங்கையின் ஒட்டு மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் சுமையை வெறும் 2 ஆண்டுகளில் முழுமையாகத் தீர்த்துவிட முடியும். தேயிலைத் துறையின் வருமானம் இனிப்பாக இருந்தாலும், அதனை உற்பத்தி செய்யும் சாதாரண மக்களின் வாழ்க்கை கசப்பானதாகவே மாறியுள்ளது. இலங்கையின் மொத்த தேயிலை நிலப்பரப்பான 5.5 இலட்சம் ஏக்கர்களில் 65%நிலம் பெரிய நிறுவனங்களிடமும், வெறும் 35%நிலம் மட்டுமே சிறு தோட்ட உரிமையாளர்களிடமும் உள்ளது. ஆனால், நாட்டின் மொத்தத் தேயிலை உற்பத்தியில் 70%பங்களிப்பை வழங்குவது இந்தச் சிறு தோட்ட உரிமையாளர்களேயாவர். சுமார் 5 இலட்சம் சிறுதோட்ட விவசாயிகளும், ஒட்டுமொத்தமாக 10 இலட்சம் மக்களும் இந்தத் தொழிலை நம்பியே வாழ்ந்துவருகின்றனர். இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை ஆணையாளர் பரிந்துரைத்த நியாயமான விலையை வழங்க மறுத்து, கொழுந்துக் கொள்வனவில் இடைத்தரகர்கள் ஏமாற்றிவருகின்றனர். ஒரு மூடை உரம் 18,000 ரூபாவாகவும், ஒரு தொழிலாளியின் நாளாந்த சம்பளம் 3,500 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது. தேயிலை ஏற்றுமதிக்கு அரசாங்கத்தினால் 18%கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. விவசாய இரசாயனங்களின் கடும் தட்டுப்பாடு மற்றும் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறை நிலவுகிறது. போக்குவரத்துச் செலவு உயர்வு மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கான போதிய வீட்டு வசதிகள் இல்லாமை போன்ற நெருக்கடிகயால் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் நாளொன்றுக்கு 30,000 கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட 250 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தேயிலைத் தொழிற்சாலைகள் முற்றாக மூடப்பட்டுள்ளன. அதிகாரிகள் இந்த அழிவைக் கண்டும் காணாமல் மௌனம் காப்பது, இலங்கையின் பாரம்பரிய தேயிலை அடையாளத்தை உலக வரைபடத்திலிருந்து அழித்துவிடும் – என்றார்.

(ச–இ)



# நினைவஞ்சலியும் அங்குரார்ப்பணமும்

நெடுந்தீவுப் பிரதேசசபையும் நெடுந்தீவு கலைப்பணி மன்றமும் இணைந்து நடத்திய முன்னாள் நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்பணி ஜெறோம் லம்பேட் அடிகளாருக்கான நினைவஞ்சலியும், நெடுந்தீவு கலைப்பயிலகம் அங்குரார்ப்பண நிகழ்வும் தேவா கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றன. நெடுந்தீவுப் பிரதேசசபைத் தவிசாளர் ச.சத்தியவரதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், ஜெறோம் லம்பேட் அடிகளாரின் திருவுருவப்படத்துக்கு கத்தோலிக்க மதகுருமார், அருட்சகோதரிகள், பயிலக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள்நினைவுச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர். நினைவுரைகளை அருட்தந்தை பி.ஜேக்கப் ஜோகராஜ், அருட்தந்தை ம.றொபேட் ஜேக்கப், அருட்தந்தை சோபன் றூபஸ் ஆகியோர் ஆற்றினர். தொடர்ந்து அரங்க நிகழ்வாக, உலக சாதனை படைத்த நெடுந்தீவைச் சேர்ந்த 7 மாணவிகளின் நடன நிகழ்வும், நெடுந்தீவு கலைப்பயிலகம் அங்குரார்ப்பண நிகழ்வும் இடம்பெற்றன.

(சு)

**காணி விற்பனைக்கு**

ஆனைக்கோட்டை வீதியில்
ஆனைக்கோட்டை சந்தியில் இருந்து
50m தூரத்தில் 9 பரப்பு நீள் சதுர காணி
விற்பனைக்குண்டு. முழுமையாகவும்
பிரித்தும் விற்கப்படும்.


தொடர்பு: 075 507 3178 (CR 47770)A

**அலுவலக உதவியாளர் (ஆண்) தேவை**

தெல்லிப்பழை பகுதியில் இயங்கி வரும் தனியார்
நிறுவனத்திற்கு, வயது: 18-35, அலுவலக பணிகள், கணக்கு
பதிவுகள் மேற்கொள்ளும் திறன் உள்ளவர்கள்.
தெல்லிப்பழை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வதித்து,
பணியிடத்தை எளிதில் அணுகக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 415 0683 (CS 32077) A

# அறிவித்தல்



**வேலுப்பிள்ளை கேதீஸ்வரன்** எனும் நபர் கடந்த 8 வருட காலமாக ஒரு தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றி சில காலமாக ஜெகன் பாமசி எனும் மொத்த வியாபார ஸ்தலத்தில் குறித்த தனியார் நிறுவனத்தின் Area Sales Manager ஆக பணியாற்றி வந்தார். அவரைக் குறித்த தனியார் நிறுவனம் பணியிடைநீக்கம் செய்ததனால், அக்குறித்த நிறுவனத் தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விற்பனை முகவரான ஜெகன் பாமசிக்கும் கேதீஸ்வரன் எனும் நபருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதையும் இவர்மூலம் பணக் கொடுக்கல் வாங்கலோ குறித்த நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு செய்தல் தொடர்பான எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் ஜெகன் பார்மசி நிறுவனம் எவ்விதப் பொறுப்பையும் ஏற்காது என்பதை எமது சில்லறை விற்பனை நிலைய வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு இதன் மூலம் அறியத்தருகின்றோம்.

**ஜெகன் பாமசி**
462/B, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 32075) A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.